இலவச வெளியீடு: யேர்மனி - இங்கிலாந்து-கனடா சித்திரை. April. 2012

Free Circulation

# வெற்றிமணி
# Vettimaniy

மணி 62 | பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A. | ஓசை 189

## யாழில் தமிழர்களின் கலாச்சாரத்தினை மாற்றத் துடிக்கும் அழகுராணிப் போட்டி!

### உங்கள் கைத் தொலைபேசியை -இனி உங்கள் சுவாசமே சாஜ் செய்யும்!

### பாம்பு கடித்தால் கண்டம் பாம்பை அடித்தால் தண்டம்!.




**Orientalische Textilien & Schmuck**
Germany
22 ஆண்டுகளாக நம்பிக்கை! நாணயத்தின்!! இருப்பிடம்.
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை
விபரம் உள்ளே!
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

**Orient Textiles & Jewellery U.K**
வட தென் இந்திய சேலைகள் நங்கையர் விரும்பும் Fancy Jewellery
165 Upper Tooting Road
SW17 7TJ-London Tel:0208 68 23 958

எங்கள் நிறுவனத்தின் 18 வது ஆண்டு நிறைவில் உங்கள் ஆதரவுக்கு நன்றி சொல்லி மகிழ்கின்றோம்!
**Travel AIR**
www.travelair.de
Tel: 0202/4936921, Fax: 0202/2443106
Tel: 0202/24431 04 - 05
email:info@travelair.de
Luisen Str.46, 42103 Wuppertal

**Gopara Gnanam**
வரலாறு காணாத மாபெரும் மலிவு விற்பனை!
15.03.2012-15.04.2012
அனைவருக்கும் எங்கள் தமிழ் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!
எம்மிடம் என்றும் மலிவு என்பதே பேச்சு!
Rheinische Str.81
44137 Dortmund
Germany
Tel: 0231/5450028
Mob: 01713306542

**பிருந்தா**
Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள் விரும்பும் இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர் உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel : 0711/ 61 58 976 Fax: 0711-61 42 663
Ludwig str. 92
70197 Stuttgart
Handy :01703344059

**T.T.S.Brothers Asien Supermarkt**
ஆடை ஆபரணம் ஆன்றாட மளிகைப் பொருட்களின் மாளிகை...
உங்கள் உறவுகளுக்கு துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
யாழ்ப்பாணத்தில் Bank of ceylon, HNB Bank, Comercial bank பணம் பெறலாம்.
Tel:0231 819288
RHEINISCHE STR 52 44137 DORTMUND
GARTEN STR-29-48147 MÜNSTER TEl:0251-2301184 Fax: 0251-2301183
Helmholtz Str.11 -46045 Oberhausen Tel:0208 202829
Germany

**கனீன் எலக்ரோனிக்ஸ்!**
உங்கள் அனைத்து நிகழ்வுகளையும் ஐரோப்பாவில் இருந்துகொண்டு உலகெங்கும் நேரடியாக பார்வையிடச் (Life Telecast) செய்வதற்கு எம்மை நாடுங்கள்!
சந்தா அட்டைகள் புதுப்பிக்கவும் புதியவை பெறவும் எம்மை நாடுங்கள்
கலைவிழாக்களைக் கலைநயத்துடன் ஒளிப்பதிவு செய்ய நாடுங்கள்....www.kaneenelectronics.de
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 Germany


அனைத்துலகத் தமிழர்களுக்கு ஓர் தமிழ்த் தொலைக்காட்சி
திரைக்குவந்து சில நாட்களேயான புத்தம் புதிய திரைப்படங்கள்!சின்னத்திரைத் தொடர்கள்!
மனதில் நிற்கும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்
உங்கள் கலைஞர் ஐங்கரன் T.V யில் காணுங்கள்!
119 38 Eurobird 9°
hot terminal 27,500
தொலைபேசி இல.0044 208 543 43 22
ayngaran.com

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
**StaR - Impex**
Tel.: 0231/8602696 Kipper str.Tor.3- 44147 Dortmund

**London's Largest Selections**
Jewellers & Silk House
எப்பொழுதும் நியாயமான விலை புத்தம் புது டிசைன்கள்
**Rathy ரதி**
28 Ealing Rd Wembley HA0 4TL London
Tel: 02089033063
209 upper tooting Road tooting sw19 7gt
0208682 2233

**S.K.Silks & Gold Praadise**
10வது ஆண்டில் முத்திரை பதிக்கும் நாம், சித்திரை தமிழ் புத்தாண்டினை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
15.03.2012 முதல் 15.04.2012 வரை
அலை அலையாச் சேலைகள் - உங்கள் ஆசைக்கு ஏற்ற தெரிவுகள் என்றும் எம்மிடம்!
Mr.P.Sritharan. Proprietor
SALE NOW ON!
30 முதல் 50 % வரை!
டோட்மூண் நகரில் மாபெரும் ராஜ முத்திரை!
என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
Adler str 33 - 44137 Dortmund Tel:0231 9501 647

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்




Tel.: 0201/236925
Fax: 0201/236928

இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.


மங்கல வைபவகங்களுக்கு ஏற்ற மணவறைகள் மற்றும் சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும் நாடுங்கள்...

Ria MONEY TRANSFER
இதோ!!! துரித பண மாற்றுச் சேவை!

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN

மக்களின் மனங்கவர்ந்த ஸ்தாபனம்

T.R.S Traders



இலங்கை, இந்திய உபஉணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

T.R.S Traders
Königswall-16 (Am Hbf)
44137 Dortmund
உரிமையாளர்: P. இராஜேந்திரவரதன்

Tel.: 0231/160 494
Fax: 0231/165 6524







மாதங்கி

A breath of fresh air: Clever gadget transforms the air from your lungs into energy to charge your phone

# உங்கள் கைத் தொலைபேசியை –இனி உங்கள் சுவாசமே சாஜ் செய்யும்!

மனிதன் உலகில் எதனையும் வெளியில் தேடவேண்டும் என்று நியதி இல்லை. நீ உன்னை அறிந்தால் அதுவே போதும் உலகை வெல்ல.

உன்னிடம் இல்லாதது எதுவும் வெளியில் இல்லை.

உன்னிடம் உள்ள நுட்பத்தைக் கண்டுபிடித்தால் போதும் விஞ்ஞானத்தில் பல சாதனைகள் புரியலாம்.

இதற்கு கணனி ஓர் உதாரணம். உன் மூளையின் ஒரு பகுதிதானே இந்தக் கணனி.

உன் மூச்சின் அவசியத்தையும், அதன் சக்தியையும் நன்றாகவே உணர்ந்திருப்பாய்.

ஓடும் போதும், கடுமையாக வேலை செய்யும் போதும், நாம் விடும் மூச்சின் அளவு மாறுபடுகின்றது அல்லவா?

மேலதிக சக்தி வேவைப்படும் போதெல்லாம் அதிகமாக மூச்சு விடுகின்றோம் அல்லவா!

அந்த மூச்சு உன்னுள் இருக்கும் உடலுக்கு புத்துணர்வு கொடுக்கின்றது அல்லவா! அதவாது உன் உடல் **(Re Charge)** சாஜ்யாக்கப் படுகின்றது அல்லவா!
இந்த நுட்பத்துக்கு விஞ்ஞான வடிவம் கொடுத்து கைத்தெலைபேசியை உனது மூச்சின் மூலம் சாஜ் பண்ணும் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை தூங்கும்போதும் நடக்கும் போதும் இல்லைப் புத்தகம் வாசிக்கும் போதும், பயன்படுத்தி உங்கள்



மூச்சில் இருந்தே மின்சாரத்தைப் பெற்று, உங்கள் கைத்தொலை பேசியை சாஜ்பண்ணிக் கொள்ளலாம்.

பிரேசிலைச் சேர்ந்த ஜோகோ பவுலோ லமோக்லியா **(Joco Paulo Lammoglia)**என்பவரால் உருவாக்கப்பட்ட இந்த உபகரணமானது கடுமையான வேலைகளை செய்யும் போது அதிகளவு மின்சக்தியை வெளிவிடவல்லது.

அத்துடன் வாரத்தில் ஏழுநாட்களும் 24 மணி நேரமும் இதனை பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

மார்ச் 15ம் (15.03.2012) திகதியிலிருந்து சந்தைக்கு வரும் இந்த உபகரணம் 60 தொடக்கம் 70 அமெரிக்க டொலர்கள் வரை இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



Lakshmi Jewellery &Silks

தங்கள் மனங்கவர் டிசைன்களில் தங்க ஆபரணத் தெரிவுகளுக்கும், வண்ண வண்ண நவநாகரீக ஆடைத் தெரிவுகளுக்கும் நினைவில் நிற்க வேண்டிய ஸ்தாபனம்

பழைய பவுனுக்கு புதிய பவுண் மாற்றிக் கொடுக்கப்படும்!

Bielefeld City- - Jahn platz
Tel:0521 4283 510

Lakshmi Jewellery &Silk
Herforder Str.08
33602 Bielefeld

செவ்வாய்க்கிழமை முதல் சனிக்கிழமை வரை காலை 11.00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

தொலைபேசி: Ruban 0179 72 35 729
http://www.lakshmi-jewellerysilks.de





'அமுதசுரபி' எமது பிரத்தியேக உணவைச் சுவைத்து மகிழுங்கள்

Dortmund நகரில் மீண்டும்
உங்களுக்கா U க்கு முன்பாக

புதிய அமுதசுரபி
இலங்கை இந்திய தமிழர் உணவகம்

www.neu-amuthasurabi.de
இலங்கை, இந்திய உணவு வகைளைச் சுவைத்து மகிழ ஓர் உணவகம்!

Öffnungszeiten
Mo- bis -Sa.11.00 - bis - 23.00
So-und Feiertage
12.00 bis15.00 Uhr


Mittag Buffet
Mo-bis Sa-11.00.15.00 Uhr
Nur 5,50€

Rheinische Str,20
44137 Dortmund
Tel:0231 91 09 89 50
Tel:0231/ 91 09 89 47 Fax:0231 530 176 82



**வெற்றிமணி**

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**
——————கவிஞர்.வி.க



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாசாலை)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

**Postfach 2765**
**58477 Lüdenscheid**
**Germany**
**Tel&Fax:**
**02351/45 88 62**
**0157 88 77 31 56**

e-mail: vettimaniy@hotmail.com

QB 830

**"வெற்றிமணிமொழி"**

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது
**அரவிந்தர்**

பத்திரிகை வடிவம்
**சிவகுமாரன் சஞ்ஜீவன்.**B .Eng (Hons)

# யாழில் தமிழர்களின் கலாச்சாரத்தினை மாற்றத்துடிக்கும் அழகுராணிப் போட்டி!








போரின் வடுக்களில் இருந்து மீண்டு எழுவதற்கு துடிக்கும் எமது தமிழ் சமூகத்தினை மீண்டும்நிரந்தரமாக அடிமட்டத்திற்கு தள்ளி விடுவற்கு பல சக்திகள் தமிழ் மக்களின் துடிப்பினையும்விட வேகமாக தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இச் செயற்பாடுகளை மேற்கொண்டுவரும் சிறிலங்கா அரசு மற்றும், அரச சார்பு நிறுவனங்களும், சிங்களமக்கள் தலைமையில் இங்கும் வர்த்தக நிறுவனங்களும் மறைமுகமாக இச்செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

செலிங்கோ V.I.P நிறுவனங்களினாலும் அதற்காக விண்ணப்பங்களை விண்ணப்பிக்குமாறு யாழ் மாவட்டத்தில் வெளிவரும்பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நிறுவனத்தினால் யாழ்பாணத்தில் அழகு ராணிப் போட்டி வைக்கபோவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. போரின்வடு எமது அடுத்த தலைமுறைவரைக்கும் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ள இக் காலகட்டத்தில்.
போரினால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு செய்ய வேண்டிய உதவிகள் எத்தனையோ உள்ளது. அதனை விட்டுவிட்டு சமூகத்தின் கலாசாரத்தினை அடியோடு மாற்றி அவர்கள் அரசாங்கத்துடன் மகிழ்வாக நிற்கின்றார்கள் என்று வெளி உலகத்திற்கு காட்டிக் கொள்வதற்காகவே இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

சமூகத்திற்கு குறிப்பாக இளைய சமூகத்திற்கு எது கவரும் என்பதனை நாடிபார்த்து,காலமாற்றத்தின் தேவை என வர்ணம்பூசி வழங்கப்படும் இக்கலாச்சாரச் சீரழிவுகள் நமது வேர்களையே நாசம்பண்ணிவிடும். வெளிநாடுகளில் அவர்களது நாட்டில் நம்மவர்கள் இசைந்து வாழ்வது வேறு. நமது நாட்டில் நாம் நாமாக வாழாமல் போவது வேறு. எனவே வெளிநாட்டு வாழ்வை தாய்நாட்டில் வாழலாம் என்று விவாதத்தை முன்வைத்து சிறார்களை சீரழிக்கக் கூடாது. உண்மையில் அழகுராணிகள் அறிவில் உடல் உள ஆரோக்கியத்தில் உயர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

அதற்கு கவர்ச்சியான உடலோ அதனை பறைசாற்றும் மேடைகளோ தேவை இல்லை. உலக அழகியாக அன்னை தெரேசாவும், ஏன் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் உங்களுக்கு தெரியவில்லையா. அழகு சேவையாலும் மலரும். இது நம்மவர் சிறப்பாக அறிந்த ஒன்று!
குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கலாச்சாரத்தினை சீரழித்து சிங்கள கலாச்சாரத்துடன் கலக்கும் நோக்கில் அரசாங்கத்தால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளாக இவை யாழ்மண்ணில் அரங்கேறிக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத் தக்கது.




உலகை வலம்வர உங்கள் உற்றதுணை நாங்கள்!
**Century Travels & Tours**
Europe Special : 99,00€ புகையிரத
Ticket to Paris மற்றும் நாடுகளுக்கும் எம்மிடம்
நேரில் வந்து மட்டுமே பதிவு செய்ய முடியும்.!
தொலைபேசிமூலம் பதிவு செய்ய முடியாது.
**München -COLOMBO-München**
(விஷேட விலையில்)
email : info@centurytravels.de
**Rhenische Strasse 29**
**44137 Dortmund.Germany** Fax: 0231 5844665

**Last Minute Tickets:**
02313975643
குறைந்த விலையில்
பயணச்சீட்டுக்கள்
நேரடியாகத்
தொடர்பு கொள்ளுங்கள்!
நேரடித்தொர்பு:
Number: 017621682149

Tel: 0231 5896557,
Tel: 0231 5574319

**Ram Nishanthan**
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
**017621682149**
website : www.centurytravels.de
Mayuran **01772330010**

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

## காதோடு காதாக

கலைக்கதிர். கதிர். துரைசிங்கம்.



**நண்பர்-**
பூப்புனித நீராட்டை ஏன் கல்யாணம் மாதிரி இந்தச் செலவு செய்து செய்கிறாய்?

**தந்தை-** மகளின்ரை கலியாணத்துக்கு நான் இருப்பேனோ தெரியாது.

**நண்பர்-** உந்தச் சாத்திரம், சாதகத்தை நம்பாதே
தந்தை- அதுவல்ல, மகள் கலியாணம் செய்யவேண்டுமே, செய்தாலும், எனக்குச் சொல்ல வேண்டுமே?

முதலும் இறுதியுமாக திருமணத்தன்று நடக்கும் மூன்று சம்பவங்கள்:-

**அ) தம்பதிகள் வாய்விட்டுச் சிரிக்கும் சிரிப்பு**
**ஆ) தம்பதிகள் தாய் தந்தையரை விழுந்து வணங்குதல்**
**இ) தம்பதிகள் உணவு பரிமாறல்**

ஒரு பெண் கணவன் தேவை என பத்திரிகையில் விளம்பரம் செய்தாள். பத்து நாட்களில் பல நாடுகளிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட கடிதங்கள் வந்தன.

அவற்றை உடைத்துப் பார்த்த பொழுது பதில் ஒரேமாதிரி ” என்கணவரை எடுத்துக் கொள்.

ஒரே வீட்டில் கணவன் மனைவி இருவரும் தொடர்பு கொள்ளும் சாதனத்தைத் தமிழில் தொலைபேசி என்கிறார்கள்.

அன்று, அங்கே வீட்டில் உணவு அருந்தி, இயற்கை அழைப்புக்கு வெளியே சென்றோம். இன்று இங்கே வெளியில் அருந்தி வீட்டில் கழிக்கிறோம்.



திருமணத்தன்று
மனைவி கணவனுக்குப்
பரிமாறும் முதல்
உணவுடன்

Take out
ஆரம்பமாகிறது

வீட்டு விருந்து
உபசாரங்களின்போது
பெண்கள் சம்பாஷணை அன்று
” என்ன மாதிரி சமைத்தீர்,
recipe யை ஒருக்காச்
சொல்லும்” இன்று, ”
என்ன விலைக்கு எடுத்தநீர்,
எங்கே வாங்கியது சொல்லும்


**ஒருவர்:-** திருமணத்தின் பின்னர் கணவன் மனைவி இருவரும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் மாதிரி.

**மற்றவர்:-** ஒருவரை ஒருவர் பார்க்க முடியாவிட்டாலும் ஒன்றாக இருக்க வேண்டும்.

## படித்ததில் பிடித்தது

**காசி. ஆனந்தனின் நறுக்குகள்...**

### வேலி



மயில் இறகு புலித்தோல்
மான் கொம்பு யானைத்தந்தம்
அழகாய் இருக்கிறது எங்கள் வீடு.

**வனவிலங்குகள் காப்பாளர் அப்பா**


### ஆணாதிக்கம்



எப்படியும் இருக்கலாம்
ஆணின் திமிர்

திரௌபதைக்கு கணவன்
ஐந்தாகவும்
அர்ச்சுனனுக்கு மனைவி
ஐந்தாகவும்

### தளை



கணவனிடம் ஒப்புதல் கேட்கிறாள்
**பெண்கள் விடுதலை அமைப்பில்சேர.**

### அடக்கம்




அடக்கம் செய்யப்படுகிறோம்...
இரண்டு பெட்டிகளில்.

சவப்பொட்டியிலும்
**தொலைக்காட்சி**
**பெட்டிகளிலும்**

**செல்வி-அவுஸ்திரேலியா**

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயகம் **குரும்பசிட்டியைப்** பிறப்பிட மாகவும்
Switzerland / Wangen ஐ வதி விடமாகவும் கொண்ட
**அமரர் பாஸ்கரன் இராசேந்திரம்.**

எண்ணி எண்ணி ஏங்கி எட்டாண்டு சென்றாலும்
கண் இரண்டில் இன்னும் நீர்த்துளிகள்
சிந்துதையா.
விண்ணுலகில் எமைபிரிந்து இறையடியில்
இருந்தாலும்
மண்ணில் வாழ்ந்த காலங்கள் நெஞ்சமெல்லாம்
நிறையுதையா.
விழி இருந்து என்ன வழி இருந்து என்ன
ஒளி இல்லை என்றால்.
பாசத்தின் திருவுருவே என்றும் எம்நெஞ்சினிலே
பாஸ்கர தீபமாய் ஒளி வீசுகின்றீர்களே
அந்த ஒளியிலே உங்கள் வழியிலே
ஓம்சாயி அருளிலே வாழ்வை தொடர்ந்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றுமிறைவனை பிரார்த்திக்கும்
**அன்பு மனைவி பிள்ளைகள்.**



**அமரர் இராசேந்திரம் பாஸ்கரன்**

அன்னையின் மடியில் 09.04.1950
ஆண்டவர் மடியில் 17.04.2004

**தகவல்:** Ravindran sasikala
Switzerland, Tel:062 961 6964


**யேர்மனியில் Manheim நகரில்**

**INDO AFRO TRAVELS**

Mit uns um die Welt

**மிகவும் மலிவாகவும் உங்கள் தேவையை**
**ஒரே இடத்தில் பூர்திசெய்து கொள்ளவும் நாடுங்கள்..**

**Tel:0621 86 24 32 12**
Fax:0621 86 24 32 14

Ria MONEY TRANSFER
**இதோ!!!**
**துரித பண மாற்றுச் சேவை!**

**S.J. Enterprises**
**Indo-Afro Travels**
S.1-11
**68161 Mannheim**

**தொடர்புகளுக்கு: ஸ்ரீதர்**
**Handy:0173 68 28 990**
e.mail info@indo-afro.de





**KIOSK & ASIAN MARKT**

*Lebensmittal*

**பசுமையான மரக்கறிகள்**
**கடல் உணவு வகைகள்**
**இன்னும் பலசரக்குப் பொருட்கள்**
**அனைத்தும் தரமாகவும் மலிவாகவும்**
**கிடைக்கும்.**

**Tel:02332 50 97 568**

**Hagener Str.158**
**58285 Gevelsberg**

**உரிமையாளர்:**
**த. மனோகரன்**


*அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!*

# ஐ.நாவில். தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால், தமிழர்களுக்கு என்னென்ன பயன்கள் ஏற்படும்?

**கலைஞர்.கருணாநிதி**



தமிழ் ஈழம் பிறக்க வேண்டும், அதுதான் எனது வாழ்நாள் லட்சியம்- கருணாநிதி

சென்னை: தமிழர்களுக்கென்று இலங்கையில் ஒரு தாயகம் வேண்டும். தமிழ் ஈழம் மலர வேண்டும். அதுதான் எனது வாழ்நாள் லட்சியம் என்று திமுக தலைவர் கருணாநிதி தெரிவித் துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் அமெரிக்க தீர்மானம் நிறைவேறிய செய்தியைத் தொடர்ந்து செய்தியாளர்களை கருணாநிதி சந்தித்தார். அப்போது அவரிடம் கேட்கப்பட்ட **கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும்...**

கேள்வி: ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. கூட்டத்தில், இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியதால், இலங்கையில் உடனடியாக எந்தமாதிரியான நெருக்கடி ஏற்படும்?

**கருணாநிதி**: இப்போதே மிரட்டல், பயமுறுத் தல்கள் எல்லாம் இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு அங்கேயுள்ள சிங்களவர்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றது என்ற செய்தி பத்திரிகைகளிலே வந்திருக்கின்றன. இதன்மீது உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நம்முடைய பிரதமருக்கு "பேக்ஸ்““ மூலமாக கேட்டுக் கொண்டு செய்தி அனுப்பியிருக்கிறேன்.

கேள்வி: ஜெனீவாவில் இந்தத் தீர்மானத்தில் இருந்த கடுமையான வார்த்தைகளை எடுத்துவிட்டு மென்மையான வார்த்தைகளை தீர்மானத்தில் சேர்த்ததாகவும் சொல்கிறார்களே? குறிப்பாக முதலில் "போர்க்குற்றங்கள்““ என்ற வார்த்தைகள் இருந்ததாகவும், பின்னர் அதை எடுத்து விட்டதாகவும் சொல்கிறார்களே?

**கருணாநிதி:** அது உண்மையாக இருந்தால் அதைப் பற்றிய திருத்தங்கள் வருவதற்கும் முயற்சிகளை மேற்கொள்வோம்.

கேள்வி: மத்திய அரசு தற்போது இந்த முடிவினை எடுக்க தி.மு.கழகம் கொடுத்த அழுத்தம் தான் காரணம் என்று சொல்லப் படுகிறது. இதே மாதிரியான அழுத்தத்தை கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பே நீங்கள் கொடுத் திருக்கலாமே?

**கருணாநிதி:** கொடுத்தோம். ஆனால் அந்தக் கருத்துகள் யார் யாரால் பாழ்படுத்தப்பட்டன என்பது கூட நாடறிந்த உண்மை.

கேள்வி: உலகத்தின் பார்வை ஒட்டுமொத்தமாக இதிலே திரும்பியிருக்கிறது. எதிர்காலத்தில் தமிழ் ஈழம் அமைவதற்கான வாய்ப்பு இருக்கிறதா?

**கருணாநிதி:**
என்னைப் பொறுத்தவரையில் அது தான் குறிக்கோள். நான் அண்மையிலே என்று மாத்திரமல்ல, கடந்த காலத்திலே பெரிய பத்திரிகைகளின் நிருபர்கள் சில பேர் "உங்களுடைய நிறைவேறாத கனவு என்ன““ என்று என்னிடம் கேட்ட போது, "தமிழ் ஈழம் தான்““ என்று குறிப்பிட்டிருக்கிறேன். எனவே அந்த கனவு நிறைவேறுகிற வரை, அது உருவாகிற அளவுக்கு என்னுடைய போராட்டமும் இருக்கும்.



கேள்வி: தற்போது ஐ.நா. வில் அமெரிக்கத் தீர்மானம் நிறைவேறிய காரணத்தால் இந்திய, இலங்கை உறவுகள் பாதிக்காதா?

**கருணாநிதி**: இப்போது அதைப்பற்றியெல்லாம் சொல்ல முடியாது.

கேள்வி: இலங்கைத் தமிழர்களுக்கு இனி மத்திய அரசு எப்படிப்பட்ட உதவிகளைச் செய்ய வேண்டும்?

**கருணாநிதி**: இலங்கைத் தமிழர்களுடைய வாழ்வின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு என்னென்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் யோசித்து, முடிந்தால் தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளுடைய துணையோடு இப்போது எப்படி இந்தத் தீர்மானத்தில் இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று குரல் கொடுத்தோமோ அதைப் போல ஒருமித்த குரலைக் கொடுத்து ஆவன செய்வதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்படும்.

கேள்வி: அமெரிக்கா கொண்டு வந்ததால் தான் இந்தத் தீர்மானம் வெற்றி பெற்றதா?

**கருணாநிதி**: இந்தத் தீர்மானம் வந்ததால் வெற்றி பெற்றது.

**கேள்வி: தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால், இலங்கை அரசுக்கு என்னென்ன நெருக்கடிகள் ஏற்படும்? இலங்கைத் தமிழர் களுக்கு என்னென்ன பயன்கள் ஏற்படும்?**

**கருணாநிதி:**
அவர்கள் இதுவரை இலங்கைத் தமிழர்களுக்குப் புரிந்த கொடுமைகளுக்கு பரிகாரம் தேடுகின்ற நெருக்கடி ஏற்படும்.

ஏனென்றால் சிசுக்கள், இளைஞர்கள், மாண வர்கள், தொழிலாளர்கள், பெண்கள், முதியவர்கள் என்று ஆயிரக்கணக்கான தமிழ்த் தாய்மார்களும், தமிழர்களும் சித்ரவதைக்கு ஆளாகியிருக் கிறார்கள்.
சவக்குழிக்களுக்குச் சென்றிருக் கிறார்கள். இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் பரிகாரம் ஏற்படவும், உலக நாடுகள் முன்னால் தலை குனிந்து நின்று காரண காரிய விளக்கங்கள் சொல்லவும் இலங்கை அரசு கடமைப்பட்டி ருக்கிறது.

கேள்வி: இலங்கை அதிபர் ராஜபக்சே தான் கொடுமைகளுக்கெல்லாம் காரணம், அவர் சர்வ தேச குற்றவாளி என்று தண்டனை வாங்கித் தரவேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்களே?

**கருணாநிதி:** இப்போது தான் பெரும்பாலான நாடுகளுடைய தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இதைத் தொடர்ந்து அந்த நாடுகள் தான் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்றார் கருணாநிதி.

யேர்மனி Dortmund நகரில்

**மாயவன்**

25.08.2012

தென் இந்தியக் கலைஞர்களுடன்

ASIJAH EUROPE

Our Contact Details:
Asijah-Europe
De Steven 12
9206 AX Drachten
The Netherlands
Tel: +31 512 54 18 31
+31 512 53 91 44
Fax:+31 512 54 38 66
Email: info@asijah.com
Hotmail:
asijaheurope@hotmail.com



ASIJAH EUROPE
Wholesale Distributors of finest Sri Lankan Grocery Foods

ஐரோப்பா எங்கும் இலங்கை இந்திய மளிகைப்பொருட்கள் மொத்த விற்பனை செய்கின்றோம்.

**திருக்கணித ஜோதிடம்**

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!



# சொல்ல வெட்கமாகுதே!

**மாதவி**

திங்கள் முதல் சனி வரை கடைகள் திறக்கப்படும் என்று எழுதியிருந்தாலும் பெரும்பாலும் கடைகளில் மூன்று தினங்கள்தான் வியாபாரம் சொல்லும் படியாக நடக்கும்.

கொழும்பில் வாடிக்கையாளர்களின் முகங்கள் தினமும் வேறு வேறாக இருக்கும். ஆனால் இங்கு அப்படி அல்ல, பெரும்பாலும் தெரிந்த முகங்கள்தான் எப்பவுமே முன்னிற்கும். எதோ உறவினர்கள் போன்று ஓர் உறவு. இந்த வாடிக்கையாளர்களுக்கும், கடைக்காரர்களுக்கும்.

கடையின் மேல் அறையில் இருந்தபடியே அவதானிப்புக் கமறாவால் தனக்கு முன்னிருந்த திரையில் பார்த்தபடி வரவு செலவுக் கணக்கைப் பார்த்துக் கொண்டு இருந்தான் காந்தன்.

இரட்டைத்தட்டு பஸ் மூச்சுவாங்கிக்கொண்டு தெருவால் செல்கிறது. அதுவும் முன்திரையில் பதிவாகிறது.

இப்ப குறைந்தது பத்துப்பேர் என்றாலும் எங்கடைசனம் வரும் கடைக்கு என்று பார்த்தான். அப்படியே பத்து அல்ல அதற்கும் மேல் ஒரே கும்பலாக நுழைந்தார்கள்.

வந்தவர்கள் கூடையை எடுக்கின்றனர். “ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்” பக்கம் அப்படியே யாவரும் திரும்பிவிட்டனர். ஒருவர் மட்டும் அமைதியாக நின்று பொருட்களைப் பார்த்தபடி நின்றார். நல்ல உயரமான கம்பிரமான தோற்றம்.
முன்பக்கம் தெரியவில்லை. பொருட்களை வாங்கியவர்கள் அப்படியே கணக்காளர் பக்கம் சென்றனர். ஆனால் கம்பபீரமானவர் எதுவுமே வாங்கவில்லை அப்படியே ஒரு இடத்தை நோக்கிய வண்ணம் நிற்பது தெரிந்தது.

திடீர் என்று அவர் ஒரு பொருளை எடுத்து கூடைக்குள் போடுவதற்கு பதிலாக அவரது யக்கற்றுக்குள் போட்டுவிட்டார்.
ஆனால் அவர் எந்தப் பதட்டமும் பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் காந்தனுக்கு பதட்டமாக இருந்தது.

உடன் பட பட என்று மாடிப் படியால் இறங்கி கடைக்குள் ஓடினான் காந்தன். அந்தப் பெரியமனிதர் அப்படியே அங்கு இன்னும் நின்று கொண்டிருந்தார்.

ஆனால் இப்போதும் அவரது பின்புறமே தெரிய, அவர் முன்பக்கம் சென்று பார்க்கலாம் என்று முன்னோக்கிச் சென்றான் காந்தன்.

“அட! கந்தான், நீங்கள் இங்குதான் நிற்கிறியள் என்று தெரியாமல் போச்சு. நான் நினைச்சேன் இந்தியா சென்று இருப்பீர்கள் ” என்று.

“தமிழ் வருடப்பிறப்பும் வருது, கடையில் “மலிவு விற்பனை“ ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்று எல்லாம் போட்டுக் கிடந்தது. கூட்டிக் கழித்துப் பார்த்தேன், நீங்கள் கட்டாயம் நிக்கமாட்டியள் ” என்று.

அதாலை மகளின்ரை சாமத்திய வீட்டுக் காட்டையும் கொண்டு வரவில்லை உங்களுக்குத் தர.

சரி! அதனால் என்ன இப்ப, என்ன எங்கட உறவு என்ன கொஞ்ச நாள் உறவே. பத்து வருடமாக ஒன்றாகப் பழகிறோம். காட்கொடுக்கிறதை விட வாயாலை சொல்லுறதுதான் முறை, வாற சனிக்கிழமை எப்படியும் ஒருக்கால் மறவாமல் வந்திடுங்கோ.

காந்தனால் ஒன்றும் பேச முடியவில்லை. நன்றாகத் தெரிந்த மனிதர். நாலுபேர் மதிக்கிற மனிதர்.
இப்பபோய் அவற்றை யக்கட்டை சோதனை போட காந்தனுக்கு வெட்டகமாய் இருந்தது.

“ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்! அந்தப் பொருட்களை எடுத்தவர்கள் எல்லாம் காசுகொடுக்க வரிசையில் நிற்க, ஒன்றும் வாங்காமல் ஒன்று இலவசமாய் எடுத்துச் செல்லும் அவர், யாவரையும் விலத்திக் கொண்டு, காந்தனுக்கும் கைகொடுத்துவிட்டு வெளியேறுகின்றார். அவருக்கு வெடகம் இருக்குதோ இல்லையோ! காந்தனுக்குச் சொல்ல வெட்கமாகத்தான் இருக்கிறது.

சின்னச் சின்னக்களவுகள் சின்னவயதில் இருந்தே ஒட்டிக்கொண்டுள்ளன. தாயகத்தில் அன்று சிறுவர்களாக இருக்கும் பொழுது, அங்கு மாங்காய் களவாகப்பிடுங்கி உண்டிருப்பார்கள். இளநீர் பிடுங்கி இருப்பார்கள், களவாகக் கள்ளும் குடித்திருப்பார்கள்.

இவை யாவும் சிறுவயதில் செய்தால் அது விளையாட்டு,

அதனையே வளர்ந்தபின்னும் செய்தால் .....

அது பெரும் **திருட்டு!**

KAILAS Fisch- Feinkost
Tel:0231 137 433 95
டோட்மூண்ட் நகரில்
இதோ கடல் உணவுக்கு ஓர் கடை
ஒவ்வொரு வியாழக்கிழமையும் இலங்கை இந்திய மீன்கள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்!
தரமான ஆட்டு இறைச்சி எம்மிடம் கிடைக்கும்!
பசுமையான உடன் மரக்கறி வகைகளுக்கும் எம்மை நாடுங்கள்
163 47 60 857
163 47 60 237
web.kailas-fisch.de
email:info@kailas-fisch.de
Adler Str.05
44137 Dortmund

# இந்தியா ஆதரவுடன் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றி!

ஜனீவா: (22.03.2012) ஐநாவில் போர்க் குற்றவாளி இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த தீர்மானம், இந்தியாவின் ஆதரவுடன் வெற்றி பெற்றது.

தமிழருக்கு எதிராக இலங்கை நடத்திய இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்கள் சர்வதேச அளவில் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது.

ஐநாவில் இன்று இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில், இலங்கையை எதிர்த்து 24 நாடுகளும், இலங்கைக்கு ஆதரவாக 15 நாடுகளும் வாக்களித்தன. இலங்கையை எதிர்த்த முக்கிய நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத் தொடர்ந்து அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் வெற்றியடைந்ததாக அறிவிக்கப்பட்டது. முன்னதாக விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய க்யூபா நாட்டுப் பிரதிநிதி, இலங்கைக்கு, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளும் ஆயுதங்களை வழங்கியுள்ளன. எனவே இதில் இலங்கையை குற்றவாளியாக்கக் கூடாது. மேலும் தீர்மானத்தை வரும் செப்டம்பருக்கு ஒத்தி வைக்க வேண்டும் என்று கோரினார்.

ஆனால் செப்டம்பருக்கு ஒத்தி வைக்க முடி யாது என்பதை உறுதியாகக் கூறிவிட்டது அமெரிக்கா. தொடர்ந்து, தீர்மானத்துக்கு எதிராகப் பேசிய ஈக்வடார், மனித உரிமை விஷயத்தில் அமெரிக்கா இரட்டை நிலை எடுத்துள்ள தாகவும், ஈராக், ஆப்கானிஸ்தானில் நடக்கும் மனித உரிமை பற்றி பேசாதது ஏன் என கேள்வி எழுப்பி, தீர்மானத் துக்கு எதிராக கருத்தைப் பதிவு செய்தது.

நைஜீரியா, உகாண்டா, தாய்லாந்து போன்ற நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாகவே கருத்து தெரிவித்தன. சீனா, பாகிஸ்தான், கிர்கிஸ்தான், மாலத்தீவு போன்ற நாடுகள் இலங்கைக்கு தீவிர ஆதரவை அளித்தன. குறிப்பாக தமிழினப் படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை தேவையில்லை என்று வாதாடியது சீனா.

ஆனால், உருகுவே, பெல்ஜியம் போன்ற பெரும்பாலான நாடுகள் அமெரிக்க தீர்மா னத்தை உறுதியாக ஆதரித்தன.

**ஆதரவளித்த நாடுகள்:**

ஆஸ்திரியா, பெல்ஜியம், பெனின், கம்ரூன், சிலி, கொஸ்தாரிகா, செக் குடியரசு, குவாத்த மாலா, ஹங்கேரி, இந்தியா, இத்தாலி,லிபியா, மொரி சியஸ், நைஜீரியா, பேரு, போலந்து, மால்டோவா, ரூமேனியா, ஸ்பெயின், சுவிஸ், அமெரிக்கா, இங்கிலாந்து, நோர்வே உருகுவே

**எதிராக வாக்களித்த நாடுகள்:**

பங்களாதேஷ், சீனா, கொங்கோ, கியூபா, ஈக்வடோர், இந்தோனேசியா, குவைத், மாலைதீவு, பிலிப்பைன்ஸ், கட்டார், ரஸ்யா, சவுதி அரேபியா, தாய்லாந்து, உகண்டா, மௌரித்தானியா.

இலங்கையின் போர்க்குற்றங்களை நாகரீக சமூகம் ஏற்க முடியாது என வாதாடின. தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு

இந்தியாவின் பிரதிநிதி பேசுகையில், இலங்கை யில் தமிழருக்கு அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும். நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரைகள் உடனடியாக நிறை வேற்றப்பட வேண்டும். இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்று கூறி, அமெரிக்க தீர்மானத்தை ஆதரிப்பதாகக் கூறினார்.

# கிரிக்கெட் சூதாட்டத்தில் இந்தி நடிகைகள் கவர்ச்சிப் பந்து வீசுகின்றார்களா?

## இலங்கை கிரிக்கெட் வீரர் தில்ஷனுடன் டேட்டிங் போனேன்-நடிகை நூபுர் மேத்தா



மார்ச் 23, 2012, சமீபத்தில்தான் மேட்ச்பிக்ஸிங் புகாரில் சிக்கி, அதை திட்டவட்டமாக மறுத்துப் பேசிய இந்தி நடிகை நூபுர் மேத்தா, தான் இலங்கை கிரிக்கெட் வீரர் திலகரத்னே தில்ஷனுடன் டேட்டிங் போனதாக பகிரங்கமாக கூறியுள்ளார். இதனால் நூபுருக்கும், மேட்ச் பிக்ஸிங் கும்பலுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் வலுத்துள்ளது.

சமீபத்தில் லண்டனைச் சேர்ந்த தி சண்டே டைம்ஸ் இதழ் ஒரு செய்தி வெளியிட்டிருந்தது. அதில், இந்தியாவைச் சேர்ந்த சூதாட்ட புக்கிகள், கவுண்டி கிரிக்கெட் போட்டிகளையும், பல்வேறு சர்வதேச போட்டிகளையும் கட்டுப்படுத்தி வரு கிறார்கள். போட்டி முடிவுகளை இவர்களே நிர்ணயிக்கிறார்கள். இந்தியா, பாகிஸ்தான் இடையிலான உலகக் கோப்பை அரை இறுதிப் போட்டியிலும் சூதாட்டம் நடந்துள்ளது என்று கூறியிருந்தது.

மேலும், சில இந்தி நடிகைகளை வைத்து பல கிரிக்கெட் வீரர்களை செக்ஸ் ஆசை காட்டி வலையில் வீழ்த்தி வருவதாகவும் அந்த இதழ் கூறியிருந்தது. இந்த செய்தியில், நடிகை நூபுர் மேத்தாவின் முகத்தை மட்டும் லைட்டாக மறைத்து விட்டு அவர் மல்லாந்து கிடப்பது போன்ற அரை நிர்வாணப் படத்தையும் சண்டே டைம்ஸ் போட்டிருந்தது.

ஆனால் இந்த செய்தியுடன் தனது படத்தை இணைத்துப் போட்டதை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தினார் நூபுர். எனக்கு கிரிக்கெட்டே தெரியாது. நான் எந்த கிரிக்கெட் வீரரையும் சந்தித்தில்லை, போட்டியைக் கூட பார்த்ததில்லை. எனது படத்தை எனது அனுமதி பெறாமல் போட்ட பத்திரிக்கை மீது வழக்குத் தொடரப் போகிறேன் என்று ஆவேசமாக குரல் கொடுத்திருந்தார்.

ஆனால் தற்போது தடாலடியாக ஒரு உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார். தனக்கும் சில கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையே தொடர்பு இருப்பது உண்மைதான் என்றும், லண்டனில் கிரிக்கெட் வீரர்கள் சிலரை சந்தித்ததாகவும், இலங்கை வீரர் தில்ஷனுடன் தான் டேட்டிங் செய்ததாகவும் நூபுர் ஒத்துக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 2009ம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்த டுவென்டி 20 உலகக் கோப்பைப் போட்டியின்போது காசினோ ஒன்றில் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் சிலரைச் சந்தித் தேன். ஆனால் எனக்கும் **கிரிக்கெட் சூதாட்டத் திற்கும்** எந்த சம்பந்தமும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

அப்போது தில்ஷனுடன் நான் டேட்டிங் செய்து வந்தேன். அவருடன் சேர்ந்துதான் கேசினோவுக்குப் போனேன். ஆனால் அதை வைத்து கிரிக்கெட் சூதாட்டத்தில் எனக்குத் தொடர்பு இருப்பதாக கூற முடியாது.

தில்ஷனுடன் நான் போனது எனது தனிப்பட்ட விஷயம், தனிப்பட்ட உறவு தொடர்புடையது. அதை கிரிக்கெட் சூதாட்டத்துடன் இணைத்துப் பார்க்கக் கூடாது. நான் தனிமையில் வசிக்கும் பெண், அழகான பெண். உலகின் எந்த மூலைக்கும் சுதந்திரமாக போய் வரக் கூடிய சுதந்திரம் எனக்கு உள்ளது. யாருடனும் நான் பழக முடியும். பேச முடியும். எனக்குப் பிடித்ததை நான் செய்ய எனக்கு சுதந்திரம் உள்ளது என்று கூறியுள்ளார் நூபுர்.

நூபுர் டேட்டிங் போனதாக கூறப்படும் தில்ஷன் மீது ஏற்கனவே **சூதாட்டப் புகார்** இருப்பது நினை விருக்கலாம்.


SURESH ASIEN FRISCH MARKT



Dortmund நகரில் 30 வருட சேவை...

இலங்கை இந்திய நாட்டு உடன் மீன் வகைகள்

நேரடி இறக்குமதியாளர்கள். Ceylon,Japan,Korea,Thailand என அனைத்து

ஆசியன் நாட்டு உணவுப் பொருட்கள் நேரடி இறக்குமதியாளர்கள்.

Restaurant களிற்குத் தேவையான அனைத்து வகையான

இறைச்சி வகைகள், கடல் உணவுப் பொருட்கள்,

அனைத்தும் மொத்த விற்பனையாளர்கள். தாய்லாந்து சீனா வியட்நாம்

இலங்கை இந்திய மரக்கறிவகைகள்

5000 மேற்பட்ட ஆசியன் உணவுப் பொருட்கள் எம்மிடம் நிறைவாக உள்ளன.

உரிமையாளர்: Pararajasingam.Suresh

Brüder Weg 6-8
44135 Dortmund
Tel:0231 55 17 60



asien super market@google.com


அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!













## பீலபெல்ட் தமிழ்க் கல்வி கலைக் கல்லூரியின் 18வது ஆண்டு நிறைவு விழா!

# இரு தினங்களும் பார்வையாளர்கள் நிறைந்து வழிந்தனர்!

பீலபெல்ட் தமிழ்க் கல்வி கலைக் கல்லூரியின் 18வது ஆண்டு நிறைவு விழா கடந்த 11.03.2012 சனிக்கிழமையும் 12.03.2012 ஞாயிற்றுக் கிழமையும் இரு தினங்களாகக் கொண்டாடப்பட்டது. மாணவர்களின் கல்வி கலை நிகழ்ச்சிகளுக்கு முதலிடம் வழங்கி இவ்விருநாளும் கொண்டாடினர். யேர்மனியில் இதுபோன்று இருதினங்கள் ஒரு பாடசாலை நிகழ்ச்சி இடம் பெற்றது இல்லை என்று சொல்லும் அளவிற்கு, சிறப்பாக மாணவர்களும் பெற்றோரும் பார்வையாளர்களும் இரு தினங்களிலும் மண்டபம் நிறைந்து காணப்பட்டனர். இதனைவிட மாணவர்களுக்கு வேறு என்ன உற்சாகம் வேண்டும்.

விழாவின் பிரதம விருந்தினர்களாக பின்வருவோர் Herr Hans-Jürgen Franz Beziksburgermeister von SPD, Herr Werner Fraktionsgesschäftsführer von CDU, Herr Peter Grün Ratsmitglied und Vertreter im Schul-und Sportausschuss von BfB, Frau Astrid Benker Vizepräsidentin von Stadtsportbund Bielefeld e.V.,Herr Harald Drescher Schulamtdirektor Schulamt für die Stadt Bielefeld, Herr Karl-Heinz Voßhans Leiter der Amtes für Intergration und interkulturelle Angelegenheiten. கலந்துகொண்டு கல்விகற்பித்துச் சென்ற ஆசிரியர்களையும், கற்பிக்கும் இன்றைய ஆசிரியர்களையும் பட்டயம் வழங்கிக் கௌரவித்தனர்.

கலை நிகழ்வுகள் யாவும் நீண்ட ஓத்திகையும், சிறந்த ஒப்பனையும் கொண்டு மேடையேற்றியிருந்தனர். மொத்தத்தில் யாருக்காக நாம் சேவை புரிகின்றோமோ அந்த மாணவ சமுதாயத்தை முன்னிலைப்படுத்தி விழா சிறப்புற்றது.

Lucky Fly
www.gozdon-travels.de
கோடை கால விடுமுறையை உல்லாசமாகக்க உடன் பதிவு செய்யுங்கள்....
Colombo
கோடைகால விடுமுறை: 699 €
பங்குனி முதல் ஆனிவரை: 499€-550€
(குறிப்பிட்ட ஆசனங்களே உண்டு முந்துங்கள்..)

(Lotto Toto)
Allee Str.38-40 A
44793 Bochum
Tel: 0234- 23 99 032
0179- 1 48 48 92
S.Siva
Kaufmann

பிரான்ஸ் லூட்ஸ் மாதா கோவில் புனிதப் பயணம்
April june july மாதங்களில்
எம் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க யேர்மனி Dortmund நகரில் இருந்தும்.Frankfurt நகரில் இருந்தும்,பல தடவைகள் லூட்ஸ் மாதா கோவிலுக்கு பஸ் மூலம் செல்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.
உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 190 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய விரும்புவோர் முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்யவும். நன்றி:
தொடர்புகள்: K.முருகா : 02972 7754
Handy: 0175 850 14 89


அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# பாம்பு கடித்தால் கண்டம் பாம்பு அடித்தால் தண்டம்!




### அவுஸ்திரேலியாவில் அதிசயச் சட்டங்கள்!

-ஷம்மிக்கா



**கார்க் கதவுக்குள் மாட்டிக் கொண்ட ஒரு பாம்பு....**

அவுஸ்திரேலியாவில் பாம்புகள் அதிகம் காணப் படுகின்றன. கோடை காலங்களில் வெப்பம் காரணமாக *reserve* பகுதிகளுக்கு அருகாமை யில் உள்ள குடிமனைகளிற்குள் இவை புகுந்து கொள்கின்றன.

பாம்பை ஒருவர் கண்டுவிட்டால் அதை அடிப்பதோ கொல்வதோ இங்கு குற்றமாகும். அதற்கென கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொண்டு பாம்பு பிடிப்பவர்களை வரவழைக்க வேண்டும்.
"ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா?" என்றெல்லாம் கேட்க முடியாது. அவர்கள் வந்து சேரும்போது பாம்புகள் தொலைதூரம் நகர்ந் திருக்கும்.

இருப்பினும் சளைக்காமல் சந்து பொந்து களிலெல்லாம் தேடிப் பாம்பைப் பிடித்து விடுவார்கள் வீரர்கள்.

பிடித்த பாம்பை மீண்டும் கொண்டுபோய் எங்காவது காட்டிற்குள் விட்டு விடுவார்கள்.
ஆனால் ஒரு அதிசயம் - அவுஸ்திரேலியாவிற்கு அயல் நாடான நியூசிலாந்தில் பாம்புகள் மருந்திற்கும் இல்லை. ஒருமுறை அவுஸ் திரேலியாவில் இருந்து வந்த சரக்குக் கப்பல் *(Cargo Ship)* ஒன்றிலிருந்து பாம்பொன்று விசா இல்லாமல் நியூசிலாந்திற்குள் இறங்கி விட்டது. அவருக்கு அங்கே நண்பர்கள் இல்லாதபடியால் "படம்" காட்ட முடியாமல் சுங்க அதிகாரிகளிடம் வகையாக மாட்டுப்பட்டுக் கொண்டது..




**பாம்பு பிடிப்பவர்களும், பாம்பைப் படிப்பவர்களும்....**

அந்தப் பாம்பினால் இரண்டு நாடுகளுக்குமிடையே பெரும் சண்டையே வந்துவிட்டது.
பாம்பு கடிக்கவந்தாலும் அடிக்கப்படாது. ஒருவாறு நீங்கள் தப்பித்துக்கொண்டு பாம்பு பிடிப்பதில் பயிற்சி பெற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

பாம்பு கடித்தால் கண்டம்! அதனை அடித்தால் (அவுஸ்திரேலியாவில்) தண்டம்.!!!

பாம்பு பிடிப்பதற்கான வகுப்புக்களும் (*Snake catching course*) அங்கு உண்டு. அங்கு சென்று படித்துப் பட்டம்பெற்று பின் படம் எடுக்கும் பாம்புகளைப் பிடிக்கலாம்.

படிப்பு! படிப்பு!! படிப்பு!!! இது இல்லை என்றால் வாழ்வில் எதனையும் பிடிக்க முடியாது.!








உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா? அது ஏன் என்று தெரியாமல் நினைக்கின்றீர்களா?
கவலையே வேண்டாம்! உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக் காத்திருக்கின்றேன். உங்கள் மொழியே எனக்கும் தாய்மொழி என்பதால் உங்கள் தேவைகளை இலகுவாகப் புரிந்துகொண்டு உதவிட முன்வருகின்றேன்.

என்றும் உங்களுடன் நாங்கள்....




Thuvaragan Nesapalan

**Telefon: 0202/5270-250**
**Mobil: 0171/6412008**
**www.rmb3.de**
**Düsseldorfer Str. 128**
**42115 Wuppertal**

rmb³
VERSICHERUNGSKONZEPTE
FINANZDIENSTLEISTUNGEN

rmb³ ist Partner der
Gothaer

# கஸ்றொப் - றவுக்சல் தமிழாலயத்தின் பத்தாவது அகவைப் பெருவிழா!




யேர்மனியில் உள்ள கஸ்றொப் - றவுக்சல் தமிழாலயத்தின் 10வது அகவை நிறைவுவிழா 11.03.2012 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நகரபிதா யோகானஸ் பைசன்காற்ஸ் அவர்கள், தமிழர்களின் பணிசெய் முறையையும் பண்பு களையும் தான் மதிப்பதாகவும், இதுபோன்ற பணிகள் தொடர கஸ்றொப் - றவுக்சல் நகரசபை மேலும் வேண்டிய உதவிகளைச் செய்யும் என்றும் உறுதியளித்தார்.

தமிழாலயத்தின் தந்தை ஆசிரியர் திரு. இரா. நாகலிங்கம் அவர்களையும், அவரது துணைவியார் திருமதி. ஆ. நாகலிங்கம் அம்மையாரையும் கஸ்றொப் - றவுக்சல் தமிழாலய நிர்வாகமும், தமிழாலயப் பெற்றோர்களும், அவர்களுக்கான கௌரவத்தை வழங்கினர். அதுமட்டுமல்ல ஆசிரியர் திரு. இரா. நாகலிங்கம் அவர்கள் பேசும் போது தான் செய்த பணிகளை மக்களோடு பகிர்ந்து கொண்டது மட்டுமல்லாது, தானும் தனது துணைவியாரும் இன்றும் ஆசியர்களாகப் பணியாற்றுவதையிட்டு மகிழ்ந்து கொள்வதாகவும், தங்கள் இறுதிக்காலம் வரை தமது பணிகள் தொடரும் என்றும் கூறி நின்றார். முதிர்ந்த வயதிலும் தமிழ்காக்க உழைக்கும் அவர் சேவையும் அவர் விருப்பும் நிறைவேற வாழ்த்துவோம்.

தற்போதைய கல்விக்கழகத்தின் பொறுப்பாளர் திரு. செ.லோகானந்தம் அவர்கள் கஸ்றொப் - றவுக்சல் தமிழாலயம் தனக்குப் புதிய பல பாடங்களைக் கற்றுக் கொடுத்துள்ளது என்றும், அதைக் கண்டு தான் மகிழ்வதாகவும் மனமாரப் பாராட்டினார். வடமத்தியமாநிலச் செயல்பாட்டாளர்களில் ஒருவரான திருமதி. வளர்மதி யோகஜெகதீஸ்வரன் அவர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். அவர் தனது உரையில், கஸ்றொப் - றவுக்சல் மக்கள் கட்டுக்கோப்பாக நடந்து கொள்ளும் முறைகளையும், பாராட்டியதோடு, மழலைகளின் கலை நிகழ்வுகளைத் தான் கண்டு ஆச்சரியம் கொண்டதாகவும் மனமார வாழ்த்தி மகிழ்ந்தார். தமிழ்க் கல்விக்கழக வடமத்தியமாநிலப் பொறுப்பாளராகப் பணியாற்றிய வரும், திரு.லோ. வலன்ரையின் அவர்கள் இவ்விழாவுக்குப் பலவழிகளில் ஒத்துழைப்பு நல்கியதோடு, நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும். தமிழாலயத்தின் இரு இளம் ஆசிரியைகளைத் தொகுப்பாளர்களாகப் பயிற்று வித்து, நிகழ்வை நடத்தியது சிறப்பாக அமைந்திருந்தது. திரு வலன்ரையின் அவர்கள் தமிழாலயங்களின் வளர்ச்சிக்கு திரு நாகலிங்கம் ஐயாவுடன் நின்று பெரும்பங்காற்றியவர். இவரது பணி தொடர வாழ்த்துகிறோம்.

## யேர்மனிய உணவகம் 300 பேருக்கான இரவு உணவை இலவசமாக வழங்கியது


இதுவரை யேர்மனியில் நடைபெறாத புதினம்? கஸ்றொப் - றவுக்சல் நகரில் நடந்துள்ளது. ஒரு யேர்மனிய உணவகம் 300 பேருக்கான இரவு உணவை இலவசமாக வழங்கியது குறிப்பிடத்தக்கது. திருமலைக் கவிஞர் திரு.தா. சிவநாதன் அவர்கள் தமிழினப்பதியம், புரிதல், ஆகிய நாடகங்களையும், தாயைப்பற்றிய கவியரங்கையும் தயாரித்து நெறிப்படுத்தி வழங்கினார். தமிழாலய இளம் மாணவர்கள் இயல்பாகவும், சிறப்பாகவும் இந்நிகழ்வுகளை அலங்கரித்தார்கள். உரை, நடனம், தமிழிசை, கவியரங்கம், நாடகம் என மாணவர்கள் தமது கலைப்பிடிப்பை வெளிக் கொணர்ந்திருந்தார்கள். முதன்மை விருந்தினர்கள், நிர்வாகக்குழுவினர், ஆசியர்கள், பணியாற்றிச் சென்றவர்கள், விழாசிறப்புற உதவி நல்கியவர்கள், மாணவர்கள் அனைவரும் இம்மேடையில் கௌரவிக்கப்பட்டார்கள்.






Krefeld நகரில் உங்கள் அபிமான ஸ்தாபனம்
K.S.SHARAN SHOP

துரித பணமாற்றுச் சேவை
இலங்கை இந்திய தாய்லாந்து மரக்கறி மளிகைப் பொருட்கள் மற்றும், கடல் உணவுப்பொருட்கள் அனைத்தும் தரமாகவும், மலிவாகவும் எம்மிடம் கிடைக்கும். எமது ஸ்தாபனம் சனி,ஞாயிறு தினங்களிலும் திறந்தே இருக்கும்.
(KIOSK என்பதனால்)
தொலைபேசி அட்டைகளும் தரமானவை எம்மிடம் கிடைக்கும்
K.Sathees
Dreikonigen Str.34
47799 Krefeld
மாதத்தில் முதல் வாரம் என்றும் மலிவு விற்பனை!
Tel:02151 36 98 646
0176 24 899 229


சரஸ்வதி கல்யாணமாலை

இதோ ஒரு திருமணசேவை! பெற்றோர்களே கவலையைவிடுங்கள்! உங்கள் பிள்ளைகளுக்கு மணமகனையோ மணமகளையோ தேடிகஸ்டப் படாதீர்கள். கலாச்சார மேம்பாட்டனும் சாதகக் குறிப்புகளுடனம் நீங்கள் விரும்பியபடி மணமக்களை சிறப்பாகத் தேர்ந்தெடுக்க எம்மை நாடுங்கள். பல ஆண்டுகள் சேவையாற்றி நம்பிக்கை பெற்ற ஸ்தாபனம்
தொடர்புகளுக்கு: செல்வி:
0173 27 50 457- Tel: 02333 86 93 159
02333 86 93 165

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# உடலுக்கு உளம் காவல்

**Dr.புஷ்பா கனகரட்ணம்**
உளவியல் நிபுனர் கனடா





காலம் காலமாக உடல், மனம் இரண்டையும் ஒருமித்து பார்க்கும் தன்மை தான் தமிழர்களுக்கு பழக்கமாக இருந்திருக்கிறது. தமிழருக்கு மட்டுமல்ல, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் என்ற பட்டியலில் அடங்கக்கூடிய ஆசிய நாடுகள், ஆபிரிக்க நாடுகள் எல்லாமே உடலையும் மனதையும் பிரித்துப் பார்ப்பதில்லை. மேற்கத்திய நாடுகளிலோ, அறிவியலின் அடிப்படையாக உடல் வேறு, மனம் வேறு என்ற கோட்பாடு இன்றுவரை ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால் எங்கள் வழக்கம் மேன்மையான, முழுமையானதொன்று என்பதை இப்பொழுது மேலைநாடுகளும் உள்வாங்க ஆரம்பித்திருக்கின்றன. தியானம், யோகா, மற்றும் பௌத்த மத வழக்கங்கள் சிலவற்றை உளவியல் ஆய்வுகளில், பரிசோதித்து, அதன் மேன்மைகளையும் உடல், உள ஆரோக்கியத்திற்கு அவற்றால் ஏற்படும் நன்ன மகள் பற்றியும் ஐரோப்பிய,அமெரிக்க ஆய் வாளர்கள் எழுதுகிறார்கள். போதாததற்கு, வந்து குடியேறிய எம்மின மக்களுக்கே அதுபற்றி பயிற்சி பட்டறைகளும் நடத்துகிறார்கள்.

எம் மூதாதையர் அறிவை நாம் மூடநம்பிக்கை என ஒதுக்குவதும். மேல் நாடுகளின் வழக்கங்களை "ஆஹா" என வாய் பிளந்து அதிசயிப்பதும், பின் எம்மிடம் கற்றதை எமக்கே மீண்டும் வெள்ளை யர்கள் புகட்டும் போது, அதையும் அண்ணாந்து அதிசயித்து கேட்பதும், நமக்கொன்றும் புதிதல்லவே.

உடல் ஆரோக்கியத்திற்கு உள ஆரோக்கியம் மிக முக்கியமானது. மனம் நன்றாக இல்லை என்றால் தலைவலிக்கிறது. தலைவலிக்கிறது என்றால் உங்களுக்கு மனக்கவலை என மற்றவர்களும் புரிந்து கொள்கிறார்கள். எங்கள் புரிதலில் ஒரு பிழையும் இல்லை. ஆனால் மனதைப் பற்றி கதைக்கத்தான் எமக்கு பயம், வெட்கம். நீரிழிவு வியாதி (diabetes) என்று சொல்ல எமக்கு வெட்கமில்லை. ஆனால் மனஅழுத்தம் (depre ssion) என்று சொல்வது கௌரவக் குறைவாக இருக்கிறது. எங்களுக்கு புரியாத, அல்லது நாம் புரிய மறுக்கும் விடயம் என்னவெனில், எம் உடல் ஆரோக்கியத்தில் உளநலனின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பது தான்.

### இருதய நோய்களும் மன அழுத்தமும்

இருதய நோய்களால் பாதிக்கப்படுபவர்களுக்கு மனஅழுத்தம் ஏற்படும் சாத்தியக்கூறு, நாம் எதிர்பார்ப்பதை விட 3.5 மடங்கு அதிகமாக இருக்கிறது. அத்தோடு ஒரு மாரடைப்பில் இருந்து குணமடைவது, சம்பந்தப் பட்டவருக்கு மனஅழுத்தமும் இருப்பின், மிகவும் கடினம். மன அழுத்தம் இருதய நோய் ஏற்படும் சாத்தியக்கூறை அதிகரிக்கும். அதே போல் இருதய நோய் ஏற்பட்டுவிட்டதால் மன அழுத்தம் ஏற்படின், அது குணமடைதலுக்கான சந்தர்ப்பங்களை கடினமாக்கும்.

பல காலமாக பதட்டநிலையால் (anxiety) அல்லது மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றவர்களை விட இலகுவாக இருதய நோய் களுக்கு ஆளாகிறார்கள். மாரடைப்பு ஏற்பட்டவர் களுக்கோ, குணமடைதலின் முக்கிய படி ஆரோக்கியமான, உடற்பயிற்சிகளுடன் கூடிய வாழ்க்கை முறை. இதற்கு தேவையான உந்து சக்தியை (motivation) மனஅழுத்தம் மழுங் கடித்து விடுகிறது. அதனால் மனஅழுத்தம் போன்ற உளநிலைகளை முளையிலேயே கிள்ளி எறிந்து விடவேண்டும்.

ஆரம்பநிலைகளில் உடற்பயிற்சி போன்ற இலகு வான வழிமுறைகள் கூட மன ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும். கோபம், தனிமை, மனஅழுத்தம் போன்ற உணர்வுகளை சமாளிக்க பலரும் புகைப்பிடித்தல் போன்ற ஆரோக்கியமற்ற பழக்க வழக்கங்களை மேற்கொள்கிறார்கள். ஆரோக்கி யமற்ற உணவுப் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இவை கூட இருதய நோய்களுக் கான சாத்தியக்கூறை அதிகரிக்கும்.

### நீரிழிவும் உளநலமும்

நீரிழிவு அல்லது சலரோகம், அமைதியான, ஆனால் படிப்படியாக பல சிக்கல்களை உருவாக் கக்கூடிய நோயாக இருக்கிறது. நீரிழிவு நோ யானது, மனஅழுத்தம், இருதய நோய்கள், பார்வை இழப்பு, மற்றும் சிறுநீரக நோய்களை எல்லாம் கொண்டுவரக்கூடிய சாத்தியக்கூறு உள்ள நோயாகும். உளரீதியாகவும் சலரோகத்துடன் வாழ்வது சவாலாகவே இருக்கிறது. அண்மையில் நடைபெற்ற ஆய்வுகள் நீரிழிவு நோய்க்கும் மன அழுத்தத்திற்கும் உள்ள தொடர்புகளை விளக்கு கிறது. நீரிழிவு நோய் உள்ளவர்கள், மற்றவர்களை விட மனஅழுத்தத்தால் பாதிக்கப்படும் வாய்ப்பு இரண்டு மடங்காக உள்ளது என கணிக்கப் படுகிறது. மனஅழுத்தம் நீரிழிவு நோயுடன் வாழ்வதை கடினமாக்கும். அதேபோல், நீரிழிவு நோய் உள்ளவர்களில் இருக்கும் உளநல தாக்கங்களை கண்டறிவது வைத்தியர்களுக்கும் மற்றவர்களுக்கும் கடினமாக இருக்கிறது.

பொதுவாகவே நீரிழிவு போன்ற எந்த உடல் நோய்கள் என்றாலும், அந்த நோயை சமாளித்து ஆரோக்கியமாக வாழ்வதற்கு உளக்காரணிகள் முக்கியம். நீரிழிவு எனும் போது அந்த நோய்க்கு தக்க உணவு அருந்துவதும், இரத்தம் பரிசோதிப்பதும் போன்ற பல விடயங்கள் இருக்கின்றன. மனப்பாதிப்புகள் இருப்பவர்கள் அல்லது சிக்கலான உறவில் வாழ்பவர்கள் எனும்போது, நீரிழிவு நோயை சமாளிப்பது என்பது பதட்டம், மனஅழுத்தம் போன்ற காரணங்களால் தடைப்பட்டு போகும். யதார்த்த பிறழ்வுடன் கூடிய உளநோய்களுடன் வாழ்பவர்கள் (psychotic disorders) நிலைமை, உடல் நோய்கள் எனும் போது இன்னும் கடினம். இவர்கள் வாழ்க்கைக் காலமும் குறுகியதாகவே இருக்கிறது.

யதார்த்த பிறழ்வுடன் கூடிய நோய்கள் எனும் போது அவர்களுக்கு குடும்ப மற்றும் சமூக ஆதரவு குறைவாக இருக்கும். வேலைவாய்ப்பு குறைவு, வருமானம், வாழிடச்சிக்கல்கள், ஊட்டச்சத்தற்ற உணவு போன்ற காரணங்களால் ஒழுங்கான சிகிச்சையோ உடற்பயிற்சியோ இருக்காது. இவர்களுக்கு நீடித்த (chronic) உடல் நோய்கள் ஏற்படும் போது அதனை சமாளிக்க முடியாமல் குறைந்த வயதிலேயே இறந்து விடுபவர்கள் அதிகம்.

### புற்றுநோயும் உளநலமும்

கடந்த கால பாதிப்புகள், மற்றும் குழந்தைப்பரு வத்தில் வன்முறை போன்ற காரணங்கள், வளர்ந்து புற்று நோய் உட்பட பலவிதமான உடல் நோய்கள் ஏற்படும் சாத்தியக்கூறை அதிகரிக்கிறது.

தொடர்ச்சி 16ம் பக்கம்...




பீலபெல்ட் நகரில் புதிய உதயம்

Devi Textilien und Schmuck

தேவி ஜவுளியகம் -நகைமாடம்

புத்தம் புதிய சகலவிதமான ஆடைத் தினுசுகள்,பஞ்சாபி ,குருதார்,நங்கையர் மனங்கவர் நவீன ரக சேலை வகைகள்,சிறுவர் ஆடைகள்,வேட்டி சால்வை, கூறைச் சேலைகள் மங்கல வைபவங்களுக்குத் தேவையான தங்காபரணங்கள் தாலிக் கொடி,காப்பு, தோடு வகைகள்,அட்டியல்,நெக்கிளஸ் வகைகள்,மரகதப் பதக்கம் மற்றும் அதிநவீன தங்காபரணங்கள் அசல் 22 காரட் தரத்தில் நம்பிக்கையோடு பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய புதிய ஸ்தாபனம்.



email:-deekz@arcor.de
Inh:-T.Sivananthan
Tel:-0049521/130 348
0049 521/89 73 684
Handy:- 0049 176/10 36 45 82
Feilen Str.8
33602 Bielefeld-Germany

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!



# (Amnion) பன்னீர்க் குடம் பன்டேஜ் ஆகிறது!






**கனக்ஸ்**

மனித முளையத்தின் கழிவு எல்லாம் கழிவு அல்ல: முன்னர் சில சந்தர்ப்பங்களில் மனித முளையத்தினது தொப்பூள் நாணின் விசேடம் பற்றி விவரமாக எழுதியருந்தோம்.

அதன் முக்கியத்துவம் நமது முன்னோர்களுக்குத் தெரிந்திருந்தது அதனால் பாதுகாக்கவும் செய்தனர். பிழையான முறையில். இக்காலத்தில் குளிர் சாதன வசதி இருக்கிறது. எனவே மீனினை குளிரில் பதனிடுகிறார்கள். ஆனால் அக்காலத்தில் அந்த வசதி இல்லாமையால் கருவாடு ஆக்கினார்கள்.

அதே போன்று தான் நமது முன்னோர்கள் தோப்பூள் நாணினை பதனிடுவதற்கு அக்காலத்தில் குளிர்சாதன வசதி இல்லாமையால் ஒரு பகுதியை உலர வைத்து, சிறு அட்சரக் கூட்டினிலே. வைத்து அரைஞர்ண் கணிற்றிலே கட்டி வைத்தனர். இருசாரரும் முக்கியத்துவத்தினை உணர்ந்தனர்.


இக்காலத்தவருக்கு விஞ்ஞானம் கை கொடுத்தது. அக்காலத்தவர் ஐதீகத்தினை நம்பினர். ஆனால் நாகரிகம் வந்து சேர அரைஞாண் அரையினை விட்டு விலகிக் கொண்டது. கைவிடப் பட்ட தொப்பூள் நாணுக்கு மீண்டும் அதிரு்'டம் யானையில் ஏறியது. உலர வைத்து அரையில் கட்ட வேண்டாம். அதை உறங்கு நிலையிலே சேமித்து வைத்தால் பின்னர் எத்தனையோ வகையான உபயோகம் உள்ளது என்றனர் நோயியல் விஞ்ஞானிகள். அதன் விளைவு தொப்பூள் நாண் சேமிப்பதறகென்றே பல வங்கிகள் செயற்படுகின்றன.
இப்போ திடீரென இன்னொரு கட்டமைப்பின உபயோகம் பற்றிப் பேசப் படுகிறது. விருத்தியுறுகின்ற முளையத்தைச் சூழ மென் சவ்வினால் ஆன பை ஒன்று உள்ளது.





இந்தப் பையினை அமினியன் மென் சவ்வு *(Amnion)* என்பார்கள். ஆனால் நம்ம கிராமத்து அம்மாக்கள் அதனை பன்னீர்க் குடம் என்பார்கள். அதற்குக் காரணம் இந்தப் பையின் உள்ளே நிரப்பப் பட்ட ஒரு பாய்பொருளிலேதான் முளையம் மிதந்து கொண்டிருக்கிறது். வெளியே ஏற்படுகின்ற அதிர்வுகள் தாக்கங்கள் மென்மையான முளைய இழையங்களை அண்டாமல் இப்பாய் பொருள தாங்கிக் கொள்கிறது. மகப் பேற்றின் பொது முதல் நிகழ்ச்சியாக இந்தப் பன்னீர்குடம் உடைகிறது. அதன் பின்னரே முளையம் கருப்பையினை விட்டு யோனி வழி மூலமாக வெளியேறுகிறது. ஆக மொத்தத்தில் மகப்பேறு முடிந்ததும் அமினியன் வேண்டப் படாத ஒரு கழிவுப் பொருள் கொண்ட ஒரு பை. வீசி எறியப்பட்டு வந்தது.
இந்தக் கருத்து நிலவி வந்தது அண்மைக் காலம் வரை தான். இப்போ அதற்குப் புது மவுசு வந்திருக்கிறது. அமினியோன் இப்போ மீள்பாவனைக்கு உட்படுத்தக் கூடியதாகக் கருதப் படுகிறது ஆனால் வேறொரு கைங்கரியத்திற்காக. இந்த மென்சவ்வுக்குரிய இயற்கையான சிறப்பியல் பாக அதன் காயம் மேற்கட்டுத் துணித்தமையைக் *(Bandage)* கூறப்படுகிறது.
அட போப்பா! இதைப் பெரிசாச் சொல்ல வந்துட்டாய். ஒரு துணித்துண்டு செய்கின்ற வேலைக்கு இத்தனை அட்டகாசம் போடுகிறாய் எனக் கேட்காதீர்கள்.

விஷயம் இல்லாமல் சொல்வேனா. ரொறன்ரோ கிழக்கு வைத்தியசாலையின் கண்பார்வையியல் பகுதிப் (Chief Ophthalmologist) பிரதான வைத்தியர *Dr. Charlotte West* சொல்வதைக் கேளுங்கள். “ காயம் பட்ட கண்களின் பரப்பிலே இந்த மென்சவ்வினைப் பரப்பி விட்டால். புண் மிகவேகமாக மாறிவிடுகிறது.
எந்தவிதமான தழும்புகளோ காணப் பட மாட்டாது. அந்த அளவினில் இது தனித்தன்மை உடையது. கண்களில் ஏற்படக்கூடிய வீக்கத்தினை குறைத்து விடுகிறது, மீண்டும் விருத்தியுறுகின்ற குருதிக் கலன்கள் தேவையான எல்லைக்கு அப்பால் போவதைத் தடுத்து விடுகிறது மற்றும புதிய கலங்கள் விருத்தியுறுவதற்கு மேண்டிய அடித் தளமாகிறது..




இது வரை அறுவை வைத்தியர்கள் பழைய முறையைப் பின்பற்றி மேற்கட்டு துணிகளைத்தான் பாவித்தனர். அதன் விளைவாக சிலருக்குப் பார்வையே மீண்டும் வராமல் போய் விட்டது. மேலும் இதன் சிறப்பியல்பாக அதனது தன்னடக்கத் தினைக் கூற வேண்டும். தன்பணி முடிந்த உடனடியாக இந்த மென்சவ்வு எவ்வத பந்தாவும் காட்டாமல் தானாகவே உதிர்ந்து விடுகிறது. இனிமேல் நீயாச்சு உன் கண்ணாச்சு என்ற தத்துவத்துடன்.

ஒன்ராறீயே மாநிலந்தில் இத்தகைய சிகி'சை முறை வெற்றி அளிதத்தின் விளைவாக EYE BANK OF CANADA ONTARIO DIVISION அமினியன் மென் சவ்வினைச் சேககரிக்கும் பயிணினை ஆரம்பித்துள்ளது. அறுவை மூலம் பிள்ளை பெறுபவர்களிடம் அவர்கள் விருப்பத்தினைக் கேட்டறிந்து அமினியனை சூல் வித்தகத்திலிருந்து பிரித்தெடுத்துச் சேமிக்கிறார்கள் ஒரு அமனியன் மென் சவ்வில் இருந்து 50 முதல் 100 துண்டுகளைப் பெறமுடியுமாம்.

T.T.S Brothers
Asien Supermarkt
உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent
இலங்கை, இந்திய மளிகைப்பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்திற்கும் நாடுங்கள்.
மங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்கநகைகள் நவீன டிசைன்களில் அழகுறத் தருபவர்கள்
TEL: 0231-819288 Fax: 0231-833431
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829
Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184



# மாணவர்களுக்கு பாலின ஈர்ப்பு, ஹார்மோன்களின் செயல்பாடு, நட்பு, காதல் பற்றியும் புரிகிற மாதிரி விளக்கவேண்டும்!

## தாயகத்திலும் மாணவர்கள் இது குறித்து விழிப்புடன் இருத்தல் அவசியம்.

### தமிழ்நாட்டில் ஆசிரியை ஒருவர் 17 வயது மாணவனை காதலித்து கடத்திச்சென்றாள்!

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் கடந்த ஆறு ஆண்டுகளில் நடந்த மருத்துவ பரிசோதனையில் 320 மாணவிகள் கர்ப்பமாக இருப்பதாக அதிர்ச்சிகரமான உண்மை தெரியவந்துள்ளது. அதை விட அபாயகரமான அறிக்கை ஒன்றை தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டு உள்ளது. இந்திய அளவில் கடந்த ஆண்டில் மட்டும் 7,379 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டதாகவும், சுமார் 40 ஆயிரம் மாணவர்கள் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிறது அந்த அறிக்கை.

இதற்கெல்லாம் யாரை குற்றம் சுமத்துவது? எதை காரணமாக எடுத்துக் கொள்வது என்பது புரியாத புதிராக உள்ளது. இன்றைய கால கட்டத்தில் பாடப்புத்தகங்களில் உள்ள சிரமங்களைவிட பாலியல் ரீதியான சிரமங்கள்தான் மாணவர்களுக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது.

மாணவிகளுக்கு பாலியல் துன்பங்கள் தரும் ஆசிரியர்களைப் பற்றித்தான் அதிகம் வெளியாகி வந்தது. மாணவியை திருமணம் செய்து ஆசிரியர்களைப் பற்றித்தான் அதிகம் கேள்விபட்டிருந்த தமிழ்நாட்டில் ஆசிரியை ஒருவர் 17 வயது மாணவனை காதலித்து அவனை திருமணம் செய்து கொள்வதற்காக ஊரைவிட்டு ஓடிய சம்பவம் தமிழ்நாட்டு ஆசிரியைகளிடையே அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது.

### தமிழ்நாட்டுக்கு இது புதுசு

மாணவனை காதலித்த ஆசிரியை தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் அல்ல. அவர் வடநாட்டைச் சேர்ந்தவர். வடநாட்டில் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்கனவே நிகழ்ந்துள்ளன. 2010 ம் ஆண்டு 27 வயது ஆசிரியை ஒருவர் 16 வயது பள்ளி மாணவனை திருமணம் செய்து கொண்ட சம்பவம் ராஜஸ்தானில் நடந்துள்ளது. அதேபோல் ஆந்திராவில் குண்டூர் மாவட்டத்தில் 8 வது படிக்கும் மாணவனை ஆசிரியை ஒருவர் திருமணம் செய்து கொண்ட சம்பவமும் நடந்துள்ளது. அங்கொன்றும் இங்கொன்றுமாக அரசல் புரசலாக நடந்த போது அதிர்ச்சியடையாத பெற்றோர்கள் தமிழ்நாட்டில் அதேபோல சம்பவம் நடந்த உடன் மாணவர்களைப் பற்றி கவலைப்பட ஆரம்பித்து விட்டனர்.

சமீபத்தில் சென்னையை அதிர வைத்த சம்பவம் 17 வயது மாணவனுடன், 37 வயது குமுது ஆசிரியை வீட்டை விட்டு ஓடிப் போன விவகாரம். மாணவனுடன் ஓடிய ஆசிரியை டெல்லியில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது கூட அவரது செயலை நினைத்து எந்த வித கவலையும் பட்டதாக தெரியவில்லை. மாணவனுடனான காதலை (!) வெளிப்படையாக தெரிவித்ததோடு அவனுடன் பழகும் போது பதினாறு வயது பெண்ணாக உணர்வதாக கூறியுள்ளார். இந்த காதலை எந்த வரிசையில் சேர்ப்பது?.



ஆசிரியை குமுதா

இந்த முறை தவறிய காதல் குறித்து கருத்து கூறியுள்ள ஆசிரியைகள், மாணவன்தான் முதலில் சபலப்பட்டான் என்று கூறினாலும் அவனை நல்வழிப்படுத்தவேண்டியது ஆசிரியையின் கடமை தானே ஒழிய அவனை பயன்படுத்திக்கொண்டது எந்த விதத்தில் நியாயம் என்று கேள்வி எழுப்புகின்றனர்.

### தெய்வத்திற்கு சமம்

ஆசான் என்பவர் தெய்வத்தை விட முதன்மையானவர். வாழ்க்கைக்குத் தேவையான கல்வியை கற்றுக்கொடுத்து நல்வழிப் படுத்துவதுதான் ஆசிரியர்களின் தலையாய பணி. அதை விடுத்து கற்றுகொடுக்க வேண்டிய ஆசிரியைகளே தடம்மாறிப் போவதனால்தான் மாணவர் சமுதாயமும் தடுமாறும் சூழல் ஏற்பட்டுள்ளது என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

2011 ஆம் ஆண்டு இணையதளப் பயன்பாடு குறித்து நடைபெற்ற ஆய்வு ஒன்றில் உலக அளவில் இந்தியாவும், மாநில அளவில் தமிழ்நாடும் முதலிடத்தில் உள்ளதாக தெரிய வந்துள்ளது. அதேசமயம் மாணவர்கள் அதிக அளவில் இணையதளத்தில் தேடிய வார்த்தை செக்ஸ் என்பது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதற்கு யாரை குற்றம் சொல்வது?.



காதல் பற்றியும், செக்ஸ் பற்றியும் பேசக்கூடாது என்று நினைக்கும் சமூகத்தில் இருந்து வரும் மாணவர்கள்தான் இணையதளத்தின் வாயிலாகவும், ஊடகங்களின் வாயிலாகவும் அவற்றை கற்றுக்கொள்கின்றனர். அரைகுறையாக தெரிந்து கொண்டு காதல் வலையில் சிக்கும் மாணவிகள் தான் கர்ப்பமாகி தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். பாலியல் சுழலில் சிக்கி ஒரு சில மாணவிகள் மன அழுத்தத்திற்கும் ஆளாகின்றனர். மாணவ-மாணவிகளுக்கு பாலியல் குறித்த புரிதல் தேவையானதாக இருக்கிறது. எனவே பிரச்சினைகளை எவ்வாறு கையாளுவதை என்பதை கற்றுக்கொடுக்கும் கடமை ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் உள்ளது என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

எங்கே போயின நீதி போதனைகள்?

பள்ளிகளில் நீதிபோதனை வகுப்புக்களை எடுத்தால் மட்டும் போதாது மாணவர்களுக்கு பாலின ஈர்ப்பு, ஹார்மோன்களின் செயல்பாடு, தொடுதல், நட்பு, காதல் பற்றியும் புரிகிற மாதிரி விளக்கவேண்டும் என்றும் அவர்கள் ஆலோசனை கூறுகின்றனர்.

பள்ளிகளில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பாலியல் கல்வி குறித்து கற்றுத் தர சில ஆசிரியைகள் தயாராக இல்லை என்றாலும் மாணவர்களின் நலன் கருதி படிப்படியாக தமிழ்நாட்டில் பாலியல் கல்வியை அறிமுகம் செய்யவேண்டும் என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாக உள்ளது.

முதலில் பெற்றோர்களும், ஆசிரியர்களும் பாடப்புத்தகங்களைத் தாண்டி பள்ளி மாணவர்களின் நலனில் அக்கறை செலுத்தினால் மட்டுமே எதிர்கால சமுதாயம் வளமானதாக இருக்கும் என்பதே நிதர்சனமான உண்மை.


லிவர்குசன் நகரில்....

## தமிழ்ப்புத்தாண்டு விழா 2012

காலம்: 21.04.2012 சனிக்கிழமை

'சுப்பர் ரலன்ட்" போட்டி



லிவர்குசன் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து நடாத்தும், விழாக்களில் ஒன்றான, தமிழ்ப்புத்தாண்டு , மிகச்சிறப்பாக நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளோம். தமிழ்ப்புத்தாண்டு விழாவை மேலும் சிறப்பிக்கும் நோக்கத்துடனும், பல கலைஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பல சிறப்பான நிகழ்ச்சிகளில் ஒன்றான," சுப்பர்ரலன்ட்" போட்டி நிகழ்ச்சியாக நடத்துவதற்கு, எமது விழா அங்கத்தவர்கள் முடிவுசெய்துள்ளனர். இந்த போட்டி நிகழ்ச்சியுடன் மற்றும்

நாட்டிய நடனம் நீங்களும் பாடலாம் பல கலைநடனங்கள் திரையிசை நடனப்போட்டி

போன்ற நிகழ்ச்சிகள், எமது பார்வையாளர்களை கவரும் முறையில் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. திரையிசை நடனப்போட்டியில் பலர் பங்கு பற்றி சிறப்பிக்க ஆவலாக இருப்பதனால், எமது அன்பான போட்டியாளர்களுக்கு, எமது பணிவான வேண்டுகோள்! போட்டியில் பங்கு பற்றி சிறப்பிக்கும் போட்டியாளர்கள், 15.04.12க்கு முன்பதாகக் கிழ்காணும் தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு, உங்கள் பெயர்களை பதிவு செய்து, போட்டியாளராக உறுதிப்படுத்திக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு: அசோகன்: 0152-28463827. சீலன்: 0178-2959247. கோணேஸ்: 0173-2031268. தில்லைவாசன்: 0176-48841989.


விழா மண்டபம்: Weiher str, 49 51373 Leverkusen.

அனைவருக்கும் எமது அன்பான புத்தாண்டு வாழ்த்துக்கள்

இப்படிக்கு - விழா அங்கத்தவர்கள் e.mail:l asokan@arcor.de


அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# ரஜினிக்கும் இசை வெறி



மருமகனின் கொலைவெறி கொலை வெறி பாடல் அச்திய அசத்தலுக்கு மாமனார் கூட கலங்கித தான் போனார்.

இல்லை என்றால் 21 ஆண்டுகளுக்குப் பிறகு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் திரையில் பின்னணி பாடினார். இந்த முறை கோச்சடையா படத்துக் காக அவர் பாடினார்.

1991-ம் ஆண்டு மன்னன் படத்தில் அடிக்குது குளிரு... என்ற பாடலை எஸ் ஜானகியுடன் இணைந்து பாடினார் ரஜினி. அந்தப் பாடலுக்கு இசை இளையராஜா.
இத்தனை ஆண்டுகளில் பல முறை அவரை பாடுமாறு பல இசையமைப்பாளர்கள் வற்புறுத் தியும் சம்மதிக்காமல் இருந்தார் ரஜினி. இப்போது மீண்டும் ரஜினி தனது அடுத்த படமான கோச்சடையானுக்காகப் பாடியுள்ளார்.

3 படத்தில் தனுஷ் கொலை வெறி பாடியபோது சுருதியும் ஜஸ்வர்யா (ரஜினி மகள்) அருகில் நின்றனர். இங்கே ரஜினியின் அன்பு மகள் சௌந்தர்யா அருகில் நிற்கின்றார். அவர்தான் படத்தின் இயக்குனரும். அங்கே ரஜினியின் ஒரு மகள் தன் கணவனை வைத்து இயக்க, இங்கு ஒரு மகள் அப்பனையே இயக்குகின்றாள்.

ரஜினி ஜஸ்வர்யா இயக்குவதைப் பார்க்க ஒருநாள் படப்பிடிப்புக் கூடச் சென்று பார்த்த தில்லை. இது ஜஸவர்யாவுக்குத் தெரியும். ஆனால் இளைய மகளுக்கு இத்தனை செல்லம். என்ன இருந்தாலும் கடைக்குட்டி கடைக் குட்டிதான்.





ஒன்று மட்டும் தெரிகின்றது ரஜினிக்கு கடைக்குட்டியை விட, மூத்தமகள் ஜஸ்வர்யாவில்தான் அதிகவிருப்பம். ஆனால் அதனைக் காட்டமுடியாது தவிக்கின்றார் என்பதுதான் உண்மை. இணர்டும் அவர் இருகண்கள்.

சரி அது அவர்கள் குடும்ப உறவு அதற்குள் ஏன் நம்மதையைப்போட்டு உருட்டுவான்.
இசையமைப்பாளர் சொல்வதைக் கேளுங்கள். ஆம் ரஜினிசார் அற்புதமாகப் பாடியுள்ளாராம். நம்புவோம்! நம்பித்தான் ஆகவேண்டும் ஏன் என்றால் சொன்னவர் இசைப்புயல்.

**Nirubagini Magendiran**
**மொழிபெயர்ப்பாளர்**
**தமிழ் - யேர்மன்**
**யேர்மன் - தமிழ்**
Tamil- Deutsch -Deutsch- Tamil
Tel: 0176/ 24012135
Email: nirumagendiran@hotmail.com
**Vereidigte Dolmetscherin und ermächtigte Übersetzerin**




அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# வியக்க வைக்கும் கட்டிடக் கலை!

## கட்டிக்கலைஞர் அந்தோனியோ கௌடி

அன்றும் இன்றும் வியப்புக்குளாக்கும் கட்டிடக் கலைஞர் பார்சிலோனாவில் அந்தோனியோ கௌடியினது படைப்புக்களை இங்கே பாருங்கள்.

இவர் ஸ்பானியா நாட்டில் பார்சிலோனாவில் 1852 ஆண்டு ஆனி மாதம் 25ம் திகதி பிறந்தார். இவர் தன் இளவயது முதல் பல கட்டிடங்களுக்கு வடிவமைத்து பெயர் பெற்றார். இவரது படைப்பகளில் சமயமும், காதலும் முக்கிய இடம் வகித்தன. 10.ஆனி 1926 இவர் மரணமடையும் வரை இவரது படைப்புக்கள் இடைவிடாது வந்து கொண்டே இருந்தன.



**கட்டிடக் கலைஞர் பார்சிலோனாவில் அந்தோனியோ கௌடி**




### Sagrada Familia கட்டிடத்துடன் இணைந்து நிற்கும் பிரியனின் ஓவியம்

அண்மையில் இங்கிலாந்தில் எட்டு வயதுச் சிறவர்களில் ஓவியத்தில் இயல்பான ஈடுபாடு கொண்ட சிறுவர்களைத் தெரிவுசெய்து அவர் களுக்கு பிரத்தியேக வகுப்பு ஒன்று நடத்தப் பட்டது.

அந்த வகுப்பில் கட்டிடக்கலைஞர் பார்சி லோனாவில் அந்தோனியோ கௌடியினது கட்டிக் கலைகளைக் கவனித்து அதனை உள்வாங்கி வரைந்த ஓவியம் ஒன்றினை இங்கு காணலாம். இவ் ஓவியம் எட்டுவயதுச் சிறுவனான செல்வன் அரவிந்தன் பிரியன் அவர்கள் வரைந்தது.

புதுமையும் பழமையும் கலந்த இந்த ஓவியம் கலைஞர் அந்தோனியோ கௌடியினது எண்ணத்தை வண்ணத்தில் பிரதிபலிக்கின்றது.
செல்வன் **பிரியன்** மேலும் வளர வாழ்த்துக்கள்.






வீடுகள், வீட்டின் முன் மதில்கள் அதன் வாயில்கள். வீட்டின் கூரைகள்,பல்கனிகள்,என எல்லாவற்றிலும் கலையம்சம் நிறைந்த வேலைப் பாடுகளைக் காணமுடிந்தது.
இவர் ஆரம்பித்து வைத்த பழமையும் புமையும் வாய்ந்த கட்டிடக்கலைகள் இன்றும் நிமிர்ந்து நிற்பதுடன், அன்று அவர் தீட்டிய வரைபடங்கள் கூட இன்று கட்டிடங்களாக நிமிர்ந்த வண்ணம் உள்ளன.
அவரது கட்டிடங்களைப் படம் எடுத்தால் அவை கள் எல்லாம் பிரமாண்டமான ஓவியமாகத் தோன்றும். அவரது படைப்பக்களை உள்வாங்கி பல ஓவியங்களை வரையலாம்.




Professional Video Move

கலை விழாக்கள்...
உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள்
எதுவானாலும் மனதோடு நிற்க
நமது ஒளிப்பதிவு கைகொடுக்கும்...

Tel:01776794261
தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55

11ம் பக்கத் தொடர்ச்சி...

# உடலுக்கு உளம் காவல்

### புற்றுநோயும் உளநலமும்

கடந்த கால பாதிப்புகள், மற்றும் குழந்தைப் பருவத்தில் வன்முறை போன்ற காரணங்கள், வளர்ந்து புற்று நோய் உட்பட பலவிதமான உடல் நோய்கள் ஏற்படும் சாத்தியக்கூறை அதிகரிக்கிறது.

நான்கு அல்லது நான்குக்கு மேலான பெரும் துயர சம்பவங்களை அனுபவிக்கும் குழந்தைகளில் வளர்ந்தபின் புற்றுநோய் ஏற்படும் சாத்தியக்கூறு இரட்டிப்பு மடங்காக இருக்க கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

இதற்கு தனியே உளநல பாதிப்பு காரணமா, அல்லது உளநலப்பாதிப்பை சமாளிக்க புகை பிடித்தல் மற்றும் ஆரோக்கியமற்ற வாழ்வுமுறை பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதால் ஏற்படுவதா என்று தெளிவாக தெரியவில்லை.

ஆய்வுகளின் படி ஏற்கனவே மனஅழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் புற்றுநோய் ஏற்படும் சாத்தியக்கூறு அதிகம். மனஅழுத்தம் உள்ள புகைபிடிப்பவர்களில் ஒப்பீட்டளவில் நுரையீரல் புற்றுநோய் ஏற்படும் சாத்தியக்கூறு 18.5 மடங்கு அதிகமாக இருப்பதாகவும் வேறு புற்று நோய்கள் ஏற்படும் அபாயம் 2.9 மடங்கு அதிகமாக இருப்பதையும் நம்பத்தகுந்த ஆதாரங்கள் கூறுகின்றன. புற்று நோய் உள்ளவர்கள் கூடுதலான மனச்சோர்வும் நம்பிக்கை இழப்பும் கெள்ளும் போது, நோயின் தீவிரம் அதிகரிப்பதாக ஆய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காகவே பல உளநல சேவைகள், குழுக்கள், புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றன. புற்றுநோய் உள்ளவர்கள் மனஅழுத்தம் கொள்ளும் சாத்தியக்கூறு அதிகம். அதேபோல் மனஅழுத்தம் புற்றுநோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறை அதிகரிப்பதுடன், பின்னர் புற்றுநோய் சிகிச்சை மற்றும் நோயின் தீவிரம், போன்ற விடயங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஆக, பொதுவாகவே மனதை ஆரோக்கியமாக வைத்திருப்பது உடல் ஆரோக்கியத்திற்கும் நன்மையே என்பதை சில உதாரணங்களோடு பார்த்தோம். இதில் குறிப்பிட்ட நோய்நிலைகளை விடவும் இன்னும் பலவிதமாக உடல்நோய்கள், உள நோய்கள் தொடர்புபட்டிருக்கின்றன.

உதாரணமாக, மனஅழுத்தம் உடல் கொழுப்பை (cholesterol) அதிகரிக்கச் செய்கிறது. எனவே எம் உளநலத்திற்கென நேரத்தை ஒதுக்குவது அவசியம்.

அது கோவிலுக்கு செல்வதாக இருக்கட்டும், உடற்பயிற்சி செய்வதாக இருக்கட்டும், தியானம், இசை, நல்ல நூல்கள், நல்ல நண்பர்கள், நல்ல சிந்தனைகள் எந்த வழியாக இருப்பினும் மனதிற்கு அமைதி, மகிழ்வு தரக்கூடிய விடயங்களில் ஈடுபடுவது அவசியம். தேவைப்படின், கௌரவம், வெட்கம் பார்க்காது, "எனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டது என்று சொல்கிறார்களா?" என்று அசட்டையாக மூடத்தனமாக எண்ணாமல் துறைசார் உதவி பெறுவதும் இன்றியமையாததே.


**தரன் வீடியோ போட்டோ**

அழகான புகைப்படங்களுக்கும்
வீடியோப் படப்பிடிப்புக்கும்
எம்மை நாடுங்கள்

Handy: 0177 24 77 449
Tel:0208 88 265 73
Handy: 015 77 133 84 64




## தூக்கணாங்




தூக்கணாங் குருவிக் கூடு
தொங்குது மரத்தில் பாரு
யாரிடம் கற்றாரு
கட்டிடக் கலை- இக்
குருவியாரு

விஞ்ஞானமும் மெய்சிலிர்க்கும்
விந்தையான வீடு-எந்த
மெய்ஞானமும் அறியா
மென்மையான கூடு

உள்ளுக்குள் ஒரு அறை
உறங்க சின்ன மெத்தை
வாசல் ஒரு குழல் போல
வடிவாத் தானிருக்கும் கூடு

காற்றடிக்கும் மழையடிக்கும்-கடும்
புயல் கூடத் தானடிக்கும்
கூடாடும் காற்றில் குருவி
சொகுசாகத் தான் தூங்கும்.

**கவிஞர் ஆவூரான்.** அவுஸ்திரேலியா









# சீனாவில் ஆண்கள் கழிவறைகளை
# பெண்கள் பயன்படுத்தி போராட்டம்! திணறிப் போன ஆண்கள்!

உலகில் எத்தனையோ விதமான போராட்டங்கள் நடக்கின்றன. இதோ சினாவில் ஒரு போராட்டம் ஆண்களை தலைதெறிக்க ஓடவைக்கும் பெண்களின் போராட்டம்.

சீனாவில் ஆண்கள் கழிவறைகளை பெண்கள் பயன்படுத்தி போராட்டம்- திணறிப் போன ஆண்கள்

பெய்ஜிங்: சீனாவில் பெண்களுக்கான கழிவறை களின் எண்ணிக்கையை அதிகரிக்க கோரி, ஆண களின் கழிவறைகளை பயன்படுத்தும் பேராட்டத் தில் பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

உலகில் அதிக மக்கள் தெகை கெண்ட சீனாவில் பெண்களுக்கான கழிவறைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இதனால் பொது கழிவறைகளில் பெண்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது.
இதனால் நாட்டில் பெண்களுக்கான கழிவறை களின் எண்ணிக்கையை அதிகரிக்க கேரி, ஆண்களின் கழிவறைகளை பெண்கள் பயன் படுத்த துவங்கி உள்ளனர்.

இதற்காக ஆண்கள் கழிவறைகளின் முன் போராட்ட பேனர்களை கட்டிவிட்டு, அவற்றை பெண்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

போராட்ட பேனர்களில், பெண்களுக்கு அதிக வசதிகள் தேவை. அவளை நேசிப்பதாக இருந்தால், அவளை காக்க வைக்காதே போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது.

இது குறித்து கல்லூரி மாணவிகள் சிலர் கூறிய தாவது,

நாட்டில் உள்ள ஆண்கள் கழிவறைகளின் எண்ணிக்கையை காட்டிலும் பெண்களின் கழிவறைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.
இதனால் ஆண்கள் கழிவறைகளில் செலவிடும் நேரத்தை காட்டிலும், பெண்கள் 2 அல்லது 3 மடங்கு நேரம் அதிகம் செலவிட வேண்டியுள்ளது.

இயற்கை உபாதைகளை அடக்கி வைப்பது ஆண்களை காட்டிலும் பெண்களுக்கு மிக கடினம்.

பெண்களின் கழிவறைகளுக்காக காத்திருப்பதை காட்டிலும், ஆண்களின் கழிவறைகளை பயன்படுத்துவதால் நேரம் வீணாவதை தவிர்க்க முடிகின்றது என்றனர்.

கடந்த (19.02.012 ம் தேதி) முதல் இப்போராட்டம் நடைபெற்று வருகின்றது.

இதனையடுத்து தற்போது குவான்ஃநகரில் பெண்களுக்கு கூடுதல் கழிவறைகளை கட்டப்பட்டு வருகின்றது. குவான்ஃநகரில் கல்லூரிகளில் உள்ள பெண்கள் கழிவறைகள் ஏற்கனவே விரிவுப்படுத்தப் பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் தலைமுறை தலைமுறையாக
வர்த்தகர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்!

Milin Impex

Asiatische Lebensmittel Groß und Einzelhandel
யேர்மனியில் உங்களுக்குத் தேவையான எல்லா விதமான தரமான
இலங்கை,இந்திய,மற்றும் ஆபிரிக்கா உணவுப் பொருட்களைச் சிரமம்மின்றி
ஒரே இடத்தில் மலிவாகவும்,
மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஒரு 20 வருட அனுபவமிக்க நிறுவனம்.

Dortmund நகரில்
Westendorf Str.41
44287 Dortmund

Tel: 0231 45 96 17 /28
Fax: 0231 18 15 288

Wuppertal நகரில்
Aue-96
42103 Wuppertal
Tel: 0202 2999 58 69

Lüdenscheid நகரில்
Höch Str.8a
58511 Lüdenscheid
Tel: 0172 5868 366

அத்துடன் உங்கள் வசதிக்கு
ஏற்ப நீங்கள் வீட்டில் இருந்தபடியே
எம்மிடம் பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளலாம்.

Dortmund நகரில்
Milin Impex
Westendorf Str.41
44287 Dortmund

மேலதிக விபரங்களுக்கு:
Web :www.milinimpex.de

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen

Tel:0231 45 96 17 / 28

Mail:info@milinimpex.de

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# சமைத்த தக்காளி.. புற்றுநோய்க்கு மருந்து!



சமைத்த தக்காளியில் உள்ள சத்துகள் புற்றுநோயை கட்டுப்படுத்துவது மட்டுமின்றி, கேன்சர் செல்களை அழிக்கவும் செய்கின்றன என்று இங்கிலாந்தை சேர்ந்த இந்திய ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளார்.

இங்கிலாந்தில் உள்ள போர்ட்ஸ்மவுத் பல்கலைக் கழகத்தின் மருந்தியல் மற்றும் பயோமெடிக்கல் சயின்ஸ் பிரிவு பேராசிரியர் மிருதுளா சோப்ரா. இந்திய வம்சாவளியை சேர்ந்தவர். தக்காளியின் மருத்துவ குணங்கள் மற்றும் புற்றுநோயை கட்டுப்படுத்துவதில் தக்காளியின் பங்கு குறித்து இவரது தலைமையில் சமீபத்தில் ஆய்வு நடத்தப்பட்டது.

சமைத்த தக்காளியில் உருவாகும் ரசாயன பொருள் புற்றுநோய்க்கு மருந்தாக செயல் படுவதை ஆய்வில் கண்டுபிடித்துள்ளனர். இது குறித்து மிருதுளா கூறியதாவது: புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கீமோ தெரபி சிகிச்சை அளிக்கப்படுகிறது. அட்ரியாமை சின், சைக்ளோ பாஸ்பமைடு போன்ற மருந்துகளை தனியாகவோ, மற்ற மருந்துகளுடன் கலந்தோ நோயாளியின் உடலில் செலுத்தி, வேகமாக பரவும் கேன்சர் செல்களை அழிப்பதே கீமோதெரபி.

நோயாளியின் உடலில் உள்ள ரத்தத்தில் இருந்து தனக்கு தேவையான சத்துகளை நோய் கிருமிகள் கிரகித்துக்கொண்டு விரைவாக நோயை அதிகரிக்கச் செய்கின்றன. இதனால் ரத்தத்தில் சத்து இல்லாமல் போவதுடன் உடலின் எதிர்ப்பு சக்தியும் குறைகிறது.

தக்காளி உள்ளிட்ட சிவப்பான பழங்களில் லைகோபீன் என்ற சத்து உள்ளது. அந்த பழங்களுக்கு சிவப்பு நிறத்தை கொடுப்பதுகூட லைகோபீன்தான். வெறும் தக்காளியிலேயே இது அதிகம் உள்ளது. சற்று எண்ணெய் விட்டு சமைக்கும்போது, லைகோபீன் சத்து அதிகமா கிறது.

இது ப்ராஸ்டேட் கேன்சர் உள்ளிட்ட அனைத்து வகையான புற்றுநோய்களையும் கட்டுப்படுத்து கிறது. நோயின் தீவிரத்தை குறைப்பது மட்டுமின்றி, பரவி வரும் கேன்சர் செல்களை அழிக்கவும் செய்கிறது.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தி உடலுக்கு ஆரோக்கியம் தருகிறது. இது தொடர்பாக மேலும் ஆராய்ச்சி நடந்து வருகிறது.


யேர்மனி Dortmund நகரில்

**மாயவன்**

**25.08.2012**

தென் இந்தியக் கலைஞர்களுடன்



யேர்மனியில் சிறந்த மணவறைக்கு நாடுங்கள்!




New in Germany
THUSHI DEKO GERMANY
T.Thiruselvam:
Tel: 02305-85945
0176-60810813
www.thushi-deko.de




அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை! இன்று அதே சுவையுடன் டோட்முண்ட் நகரில் ஓர் நானா கடை அதுதான்




அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# பிரிட்டிஷ் ஆட்சியை விரட்ட இந்திய இளைஞர்களுக்கு, ஜெர்மனி மறைமுகமாக உதவி செய்தது!

## ஜெர்மனி உருவாக்கிக் கொடுத்த கப்பலின் பெயர்தான் எம்டன்!



ஆங்கிலேயர் ஆட்சி வந்தபின், தமிழகத்தில் மிகப் பெரிய போர் எதுவும் நடந்ததில்லை. ஒரேயொரு தாக்குதல் மட்டுமே நடந்தது. ஆங்கிலேய அரசுக்கு எதிராக நடந்த தாக்குதல் என்பதால், அதை போர் கணக்கில் சேர்த்து விட்டனர் ஆங்கிலேயர்கள்.

1914ம் ஆண்டு செப்டம்பர் 27-ந் தேதி இரவு, தூக்கத்தில் இருந்த சென்னைப் பட்டினத்தில் அடுத்தடுத்து குண்டுகள் பறந்து வந்து விழுந்தன. செயிண்ட் ஜார்ச் கோட்டை, துறைமுகம், பாரிமுனை, உயர்நீதிமன்ற கட்டிடம் என்று நகரின் முக்கிய இடங்களில் தீப்பற்றி எரிந்தது.

கண்ணிமைக்கும் நேரத்தில் அடுத்தடுத்து குண்டுகளை வீசி விட்டு தப்பியோடிய கப்பலை தேடி, பிரிட்டிஷ் கப்பல்கள் கடலில் அலைந்தன. ஆனால், குண்டு வீசிய எம்டன் கப்பல் அடுத்த சில நிமிடங்களில் பாண்டிசேரிக்கு போய் விட்டது. அங்கு காத்திருந்த சுத்தானந்த பாரதியும், ஒட்டப்பிடாரம் மாடசாமியும் கப்பலில் ஏறிக் கொண்டனர். கப்பலில் இருந்த தமிழ் இளைஞரிடம் பேசினர்.

பின்னர், எம்டன் கப்பல் கன்னியாகுமரியை அடைந்தது. அந்த தமிழ் இளைஞர் குமரிக் கரையில் இறங்கினார். மண்ணை முத்தமிட்டார்.

பின்னர், மீண்டும் எம்டனில் ஏறி ஜெர்மனியை அடைந்தார். பிரிட்டிஷ் காரர்கள் ஆளும் நாட்டில் குண்டு வீசிவிட்டு தப்பி வந்து விட்ட வீரன் என்று, அந்த தமிழ் இளைஞனை கட்டிப்பிடித்து பாராட்டினார் மன்னர் கெய்சர்.

அந்த தமிழ் இளைஞர் தான் செண்பகராமன். இவர் எல்லாராலும் மறக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர். செப் 15, 1981ம் ஆண்டு திருவனந்தபுரத்தில் பிறந்த தமிழர். 17 வயதிலேயே "ஜெய்ஹிந்த்" என்ற வீர முழக்கத்தை முதன் முதலில் உருவாக்கியவர் இவரே.

முதலாம் உலகப்போரில் பிரிட்டனும், ஜெர்மனியும் மோதின.

பிரிட்டிஷ் ஆட்சியை விரட்ட இந்திய இளைஞர்களுக்கு, ஜெர்மனி மறைமுகமாக உதவி செய்தது. தாவரவியல் ஆராய்ச்சி என்ற பெயரில் கன்னியாகுமரி வந்த ஜெர்மன் உளவாளி ஸ்டிரிக்லாந்த் என்பவர், செண்பகராமனின் வேகத்தை பார்த்து அசந்துபோய், அவரை ஜெர்மனிக்கு அழைத்து சென்றார். அவருக்கு, ஜெர்மன் கடற்படை சிறப்பான பயிற்சியை அளித்தது. எம்டன் கப்பலை உருவாக்கி, செண்பகராமன் வசம் கொடுத்து சென்னையை நோக்கி அனுப்பியது ஜெர்மனி.

அன்னிய ஆதிக்கத்தை வேரோடு அகற்ற வேண்டும் என்ற வேகம் கொண்டிருந்த செண்பகராமன் எம்டனை பயன்படுத்தி, சென்னையை அதிரச் செய்தார். மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாத வகையில் அவரின் தாக்குதல் இருந்தது குறிப்பிட்ட வேண்டிய விஷயமாகும்.



பெரிதாக எந்த சேதமும் இல்லை. இருப்பினும் ஆங்கிலேயே அரசு ஆடிப்போனது. சென்னையில் வசித்த சுமார் 70 ஆயிரம் பொதுமக்கள் உயிர் பயத்தால், நகரத்தை விட்டு ஓடினர்.

கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழகம் பார்த்த ஒரே போர் இதுதான். 1934-ம் ஆண்டு ஜெர்மனியில் செண்பகராமன் மறைந்தார். தனது அஸ்தியை கன்னியாகுமரி கடலில் கரைக்க வேண்டும் என்பது அவரது விருப்பம்.

1966-ம் ஆண்டு அவரது அஸ்தியுடன், அவரது மனைவி லட்சுமி மும்பையில் வந்து இறங்கினார்.
தகவல் அறிந்த பிரதமர் இந்திராகாந்தி, இந்தியா வின் போர்க்கப்பலான ஐ.என்.எஸ்., டில்லியில் செண்பகராமனின் அஸ்தியை ஏற்றி குமரிமுனைக்கு அனுப்பி வைத்தார். அங்கு அஸ்தி கரைக்கப்பட்டது.

இன்றும் எம்டன் என்ற அந்தக்கப்பலின் பெயர் ஒரு வீரத்தின் சொல்லாக மாறி உள்ளதைக் காணலாம்.
அவன் எம்டன்டா! எம்டன்தான் அவன், என்னும் சொல் இன்றும் வழக்கில் இருப்பதைக்காணலாம்.



**இவரைத் தெரியுமா?**

பக்கம் 22 க்கு வாருங்கள்..




அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!













# நாங்க நல்ல நண்பன் டி!



ஆர்யாவின் “ரகசிய“ வீட்டில் நயன்தாரா! நடிகர் நடிகையர் வாங்கும் சொத்துக்கள் பெரும்பாலும் வெளியில் தெரியாது. அப்படி வெளியில் தெரியாமல் ஆர்யா வாங்கிய வீட்டுக்கு வந்துள்ளார் நடிகை நயன்தாரா.

பிரபு தேவா விவகாரத்திலிருந்து முழுசாக வெளியில் வந்துவிட்ட நயன்தாரா இப்போது தமிழ்ப் படங்களில் நடிக்க ஆர்வம் காட்டி வருகிறார். முன்பெல்லாம் சென்னைக்கு வருவதற்கே பல முறை யோசித்துக் கொண்டிருந்தவர், இப்போது நினைத்தால் ஒரு முறை சுதந்திரமாக வந்து போக ஆரம்பித்துள்ளார்.

ஏற்கெனவே இரு முறை சென்னை வந்த நயன், சமீபத்தில் ஆர்யாவின் இந்த புதிய வீட்டுக்கு வந்துள்ளார். ஆர்யா வீட்டுல அப்படியென்ன விசேஷம்?

இருவரும் நல்ல நண்பர்களாம். அந்த வகையில் தன் புதிய வீட்டில் நயன்தாரா வந்து குத்துவிளக்கேற்றினால் நன்றாக இருக்கும் என விரும்பினாராம் ஆர்யா.

விருப்பத்தை நயனிடம் சொன்னதும், அதுக்கென்ன வந்துட்டா போச்சி என அடுத்த நாளே வீட்டுக்கு வந்துவிட்டாராம் நயன்!

இன்னும் சில நெருங்கிய நண்பர்களை மட்டும் நிகழ்ச்சிக்கு அழைத்திருந்தாராம் ஆர்யா. அனைவர் முன்னிலையிலும் நயன் குத்துவிளக்கேற்ற, குடித்தனத்தை ஆரம்பித்துள்ளார் ஆர்யா.

சீதையாக நடித்த நாள் முதலாய்.... நயன் பல நன்மைகளைச் சந்தித்து வருகின்றாராம். இன்று குத்துவிளக் கேற்றும் குலமகளா நயன்.

உங்கள் தேவைகளை யாழ்ப்பாணத்தில் நிறைவு செய்யச் சிறந்த இடம்!













அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!





ஓவியம்: கண்ணா- 2012

ஒரு பேருந்தினுள் ஒரு பயணிக்கும் பேருந்து நடத்துனருக்கும் இடையில் ஓர் உரையாடல்:
“ரிக்கற் எடுத்தாச்சா?” -பயணியிடம் கேட்டார் நடத்துனர்.
“குடுத்தாத்தானே எடுக்கிறதுக்கு?” -இது பயணி.
“சரி..எங்கை போறீங்க?” - நடத்துனர் கேட்டதும் தாமதமின்றிப் பதில் வந்தது பயணியிடமிருந்து.
“வீட்டுக்குத்தான் போகவேணும்!”
“அதுதான் எங்கை?”
“வீடு எங்கை இருக்கும்? தெருவிலைதான்!”
-பயணியின் இந்தப் பதிலில் கடுப்பானார் நடத்துனர்.
“ஏய்.. என்ன நக்கலா? எங்கை போறதெண்டு ஒழுங்காய்ச்சொல்லி ரிக்கெற் எடுத்திடு!”
“இப்ப எதுக்கப்பா கோவிக்கிறை? நான் வீட்டுக்குத்தான் போகவேணும். ஆனா எந்த வீட்டுக்கு எண்டு இன்னும் முடிவெடுக்கேல்லை. முந்தாநாள் மனிசியோடை சண்டை பிடிசசுக ்கொண்டு வெளிக்கிட்டனான். இண்டைக்குத்தான் திரும்பிப் போறன். என்ரை வீட்டை போறதா இல்லாட்டில் என்ரை அம்மாவீட்டை போறதா எண்டதைப் பற்றி முடிவெடுக்கேலாமல் கிடக்கு !”
“ சரி.. கெதியிலை முடிவெடுத்து வை. நுான் மற்றவைக்கு ரிக்கெற் குடுத்திட்டு வாறன் அதுக்குள்ளை ஒரு முடிவெடுத்துவை! ”
அருகிலிருந்து பார்த்த சக பயணிகள் சிரித்தார்கள்.

அந்தப் பயணிக்காகவோ நடத்துனருக்காகவோ யாரும் பரிதாபப்படவில்லை.
ஓரு சராசரி பேருந்துப் பயணம்தான்.
அதிலேயே அவ்வப்போது சில சங்கடங்கள் குறுக்கிட்டு விடுகின்றன.
எங்கே போகிறோம ? ஏன் போகிறோம் என்று புரியாமலேயே தொடர்கிற பயணமும் எங்கேயாவது போய் முடிந்துதானாக வேண்டும்.
பேருந்துப் பயணத்துக்கு ஏதோ ஒரு முடிவைக் கண்டு கொள்ள முடிகிறது.
இங்கேதான் போய்க்கொண்டிருக்கிறோம் என்று இடையிலாவது தெரிந்து விடுகிறது.
ஆனால்-
நெடுங்காலமாகத் தொடர்கிற வாழ்வுப் பயணம்?
இது எங்கே போய் முடியப் போகிறது ? எபபடி முடியப் போகிறது ?
இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்?. எதை நாடிப் போய்க் கொண்டிருக்கிறோம்? - - எவரிடமும் தெளிவான விடை இல்லை.
ஆனால் பயணித்துக்கொண்டுதானிருக்கிறோம்.

இந்த உலகம் வட்ட வடிவமானது என்று அறிந்துகொண்ட பின்னால் மனிதனுக்கு ஒரு உண்மை புரிந்திருக்கிறது..
“ ஓரிடத்திலிருந்து புறப்பட்டு நாம் இந்த உலகத்தைச் சுற்றி வந்தால் எங்கே தொடங்கினோமோ அங்கேதான் வந்து நிற்போம்! ” என்று சொல்கிறான் அவன்.
சரிதான்- ஆனால் தொடங்கும் இடம் எங்கே என்பதே நமக்குத் தெரிவதில்லை என்றானபோது இங்கேதான் வந்துநிற்கப் போகிறோம் என்பது எப்படி நமக்குத் தெரியப்போகிறது ?
எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அதே வழியில் நாமும் ஓடிக்கொண்டிருக்கிறோம். இந்த ஓட்டத்தில் நமக்குப் பக்கத்தே ஓடிக் கொண்டிருப்பவர்களிடம் கடன்வாங்கிய உணர்ச்சிகள் நம்முடன் கூடவே தொடர்கிறது.

ஒரு ஆணும் ஒருபெண்ணும் கலந்து உற்பத்தி செய்த உடலைக் கடன்வாங்கி அதை நமக்குச் சொந்தமான தென்ற கற்பனையில் ஓடிக்கொண்டிருக்கிறோம். அதைப் பறித்துக்கொள்வதற்குக் காலமும் நம்மோடு கூடவே ஓடிவந்து கொண்டிருக்கிறது
பருவ காலங்களுக்கேற்ப பக்கத்துணையாய் வருபவர்களின் உணர்ச்சிகளில் நமக்குக் கொஞ்சமும், நமது உணர்ச்சிகளில் அவர்களுக்குக் கொஞ்சமுமாய் பரிமாறிக்கொள்ளப் படுகிறது.
இந்த உடல் என்பது நமக்களிக்கப்பட்ட பிறவிக்கடன் என்பது புரியாமல் காலம் இதை நமக்குப் பரிசளித்திருப்பதாய் நம்பிக்கொண்டு ஓடிமுடித்து சட்டென ஓர் இடத்தில் சலனமற்றுப் படுத்துவிடும்போது பக்கத்துணையாய் எவரும் இருப்பதில்லை.




மற்றவர்கள் என்ன நாமென்று நினைத்துக்கொள்ளும் நாமே நமக்குத் துணைநிற்பதில்லை.
நிரந்தரமற்றது உலக வாழ்வு என்பதற்கு உதாரணமாக உயிரிழந்த உடல்கள் நமக்குச் சாட்சி பகர்கின்றன. நிரந்தரமானது மரணம் மட்டுமே என்றும் அவை நமக்குக் கற்பிக்கின்றன.
உடலைக் கடன் தந்தவர்கள் அதைத் திருப்பிக் கேட்பதில்லை.
ஆனால் இந்த உடலை வளர்க்க உறுதுணை புரிந்த இந்த உலகம் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறது.
ஆசைகளையும் அனுபவங்களையும் சுமந்த உடல் மறுபடி மண்ணுக்கே சொந்தமாகிவிடுகிறது.
இந்த உடலைச் சுமந்த உயிரோ வாழ்வுக்கான அர்த்தத்தைத் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கிறது.
“ எங்கைபோறதெண்டு முடிவுசெய்தாச்சா ?”
-பேருந்து நடத்துனர் மீண்டும் பயணியின் அருகில் வருகிறார்.
“என்ரை வீட்டைதான் போறன்! அம்மாவீட்டை போனாலும் அவவும் இதைத்தான் சொல்லுவா ! பாவம் என்ர மனிசி. மூண்டு நாளாய்ப் பட்டினி கிடக்கிறாளோ என்னவோ !”
“ சரி சரி எங்கைபோறதெண்டு சொல்லுங்கோ !”
“ எங்கை.. என்ரை வீட்டைதான் போறன்... இதையே எத்தனை தரம் கேட்பீங்கள்!”
“ சரி.. கேள்வியை மாத்திக் கேட்கிறன்.. நீர் எங்கை இறங்கப் போறீர் ?”
“ இறங்கிறதெண்டால்.. நிலத்திலைதான் இறங்கவேணும்! ”
“ அப்பிடியா சங்கதி.. நிலத்திலைதான் இறங்குவீரோ.. பஸ்ஸை நிற்பாட்டச் சொல்லுறன் இதிலையே இறங்கும்! இதுகும் நிலம்தானை !”
“ அதெப்பிடி இங்கை இறங்கிறது இது என்ரை வீடு இல்லையே ! ”

“ சரி.. இப்ப சொல்லும் எங்கைபோறீர் ?”
“ அதுதான் முதல்லையே சொன்னனே வீட்டைதான் போறன்!”
(தேடல் தொடரும்)




யேர்மனியில் பிராங்பேட் நகரில்...
Jaffna Basar
தங்க நகைச் சீட்டு ஆரம்பம்
மாதா மாதம் ஆதிஸ்டச் சீட்டு...அதிஸ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத்தேவை இல்லை.

அதிஸ்டம் பெறதவர்களும் 12ம் மாதம் 1200 யூரோ பெறுமதியான நகைகளைப் பெறலாம்.
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்த நகைகள்
பயணங்களை இனிமையாக்க குறைந்த விலையில்
விமான பயணச்சீட்டுக்கள் மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும்
Jaffna Basar Jewellery
Kaiserstr.64 (Laden Nr.22)
60329 Frankfurt am Main
உரிமையாளர் நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53


யேர்மனியில் முல்கைம் நகரில்...
Jaffna Basar
இல்லத்திற்கு வேண்டிய மளிகைப் பொருட்கள்
கடல் உணவு வகைகள்
பசுமையான மரக்கறிகள்.

தெலைபேசி அட்டைகள்
சிம் காட்டுக்கள்

அனைத்திற்கும் நாடுங்கள்
Jaffna Basar
Kaiserstr.39
45468 Mülheim
Germany
Tel:02086 96 64 85
Tel:01787633084

அனைவருக்கும் எங்கள் இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# An allen Schueler,Schuelerinnen, Abiturienten und Studenten





Wir alle teilen die selben Schicksaal 'Pruefungen' von Klassuren bis zur Staatsexamen.Niemand bleibt verschont vom Pruefungsstress ,wenn der Tag der pruefung naeher rueckt.
Hier einige gute Tipps um immer in gute Laune zu beiben und die Pruefungszeit zu ueber bruecken.

**1.VIEL LACHEN:**

Eine einfachere Stresskiller gibt es schon garnicht.Beim lachen werden die Endorphinen im Gehirn natuerlich Freigesetzt und erhoeht damit bessere Gehirn Leistung.
Um in gute laune zu kommen.Hier einige witze:

**Sonne und Mond:**
Warum bist du nur so blass?“, fragt die Sonne den Mond. „Weil ich immer Nachtschicht habe.“
**Golf Unfall**
Wie nennt man es, wenn zwei **VW Golf** zusammenstossen? **Golfkrieg**!
**F-I-A-T**

Wofür steht Fiat? F=Fehler I=In A=Allen T=Teilen
Habt ihr gelacht? Wenn nicht dann ist das Lachen doch nicht so einfach wie ich es mir gedacht habt vielleicht sind die andere punkte besser.

**2.MUSIK HOEREN**

Jungs und Maedels es ist bewiesen worden beim Hören von Musik ,wird das Gehirn gefördert und die Zellenstruktur verbessert. Menschen die Musik hören sind in der Regel schlauer und intelligenter. Lernen kann doch spass machen” Let's begin the Party” .

**3.POSITIVE LEBENSEINSTELLUNG**
Man kann mit positive denken die Denkfaehigkeit steigern. Was uns Viya ja schon in seinem letzen film NAANBAN gezeigt hat mit dem Satz 'All is well'. An alle die nicht Viya fan sind kein problem sagt einfach 'Alles wird gut' hat die gleiche Auswirkung

4.GEFUEHLE ZEIGEN
Wer sagt das Gefuehle zeigen eine Ausdruck von schwaeche ist?Im gegensatz es ist eine grosse Staerke. Man soll gefuehle Ausdruck geben da Emotionen, die gesunde Durchblutung im Gehirn foerdern - auch das Hirn braucht seine Streicheleinheiten An unserem maenlichen Geschlecht,Ihr braucht euch nicht unter der MATCHO Klischee zu verstecken zeigt euer wahres Gesicht und die Maedels wuerden es lieben. Ausserdem wuerdet ihr auch gut in der Pruefungen abschliesen.

**5.Atemtraining**
In einer Stresssituation tief ein und aus atmen hilft, damit der Sauerstoffgehalt im Blut erhoeht wird und somit den Blutfluss zum Gehirn. 15minuten taeglich entspannte und tiefe Atemuebungen verbessert die Lebensqualitaet und die Gehirnfunktionalitaet enorm.In der Tamilischen Kultur ist yoga und meditation sehr weitverbreitet,die genau auf diese lebensweise basieren.
Diese 5 einfache schritte soll euch helfen euere Pruefungen gut zu meistern und trotzdem eine gute Zeit zu haben.
Toi toi toi und viel Erfolg.
Bis zum naechsten mal euere **Sharmila**






# திரை உலகம்





இந்த வருடத்துக்கான தேசிய திரைப்பட விருதுகள் புதுடெல்லியில் அறிவிக்கப்பட்டன. இதில் சிறந்த நடிகைக்கான விருது வித்யா பாலனுக்கு கிடைத்துள்ளது. தமிழுக்கு ஐந்து விருதுகள் கிடைத்துள்ளன. 59,வது தேசிய திரைப்பட விருதுகள் பற்றிய அறிவிப்பை, மத்திய ஒளிபரப்புத் துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டது. சிறந்த நடிகைக்கான விருது, “தி டர்ட்டி பிக்சர்“ என்ற இந்திப் படத்தில் நடித்த வித்யா பாலனுக்கு கிடைத்துள்ளது. இது சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கையை மையமாக கொண்ட படம்.

## சில்க் சிமித்தாவுக்கு கிட்டாத தேசிய விருது
## சில்க்காக நடித்த வித்தியா பாலனுக்கு கிட்டிவிட்டது!

இந்த விருதுகள் மே மாதம் 3,ம் தேதி புது டெல்லியில் நடக்கும் விழாவில் வழங்கப்படும்.

தென்னிந்திய தாரகை சில்க் ஸ்மிதாவின் வாழ்க்கை வரலாற்றை “தி டர்ட்டி பிக்சர்“ என்ற பெயரில் இந்தியில் படமாக எடுத்துள்ளார்கள்.

சிலுக்கு சிமித்தாவிற்கு வாழ்வில் கிட்டாத தேசியவிருது சிலுக்காக நடித்த வித்யா பாலனுக்கு கிடைத்துள்ளது.

சிலுக்கு கவர்ச்சியாக நடித்தாலும் நடிப்பாற்றலும் உள்ள ஒரு நடிகை. அவருக்குள் மறைந்து கிடந்த சோகம் திரைக்கதையாகி தேசியவிருது வரை சென்றுவிட்டது.

இந்த படம் குறித்த தகவல்கள் பத்திரிகையில் வெளிவந்த சமயம், படத்திற்கு தடை கோரி ஆர்ப்பாட்டம் செய்தார்.பிரபல நடிகர் வினுச்சக்கரவர்த்தி.

சில்க் கதையை யார் படமாக்கினால் இவருக்கென்ன என்ற கேள்வி ரசிகர்களுக்கு எழுந்தாலும், இவர் இல்லையென்றால் சில்க் என்ற நடிகையே இல்லை என்பது கோடம்பாக்கத்திற்கு நன்றாகவே தெரியும். வினுச்சக்கரவர்த்தி அவரே தனது பேட்டியில் நீண்ட விளக்கம் அளித்துள்ளார்.

பதினெட்டு வயசுல சில்க்கை ஓரிடத்தில் பார்த்து சினிமாவில் நடிக்க அழைச்சிட்டு வந்தவன் நான். அவருக்கு சில்க் ஸ்மிதான்னு பேரு வச்சதும் நான்தான். ஒரு வருஷம் எப்படி இருக்கணும், எப்படி பழகணும்னு சொல்லிக் கொடுத்து 19 வயசுல நடிக்க வச்சேன். இந்த கேரக்டர்ல நடிக்கணும்னு ஸ்ரீப்ரியா, தீபா ரெண்டு பேரும் ஆசைப்பட்டாங்க. ஆனால் இவரைதான் நடிக்க வைக்கணும்னு பிடிவாதமா அறிமுகப்படுத்தினேன். “வண்டிச்சக்கரம்“ படத்தில் வடிவுங்கிற அந்த கேரக்டரை உருவாக்கி நடிக்க வச்சதோட முடிஞ்சு போகல எனக்கும் சில்குக்குமான சம்பந்தம். முப்பது வயசுல அந்த பொண்ணு சாகிற வரைக்கும் ஒண்ணா இருந்திருக்கோம்.

தான் யாரு? அப்பா அம்மா யாரு? ஆறு வயசுலேர்ந்து பட்ட துன்பம் என்ன? காதல்னா என்ன? செக்சுன்னா என்னன்னு எங்கிட்ட அந்த பொண்ணு சொல்லாத விஷயமே இல்ல.

சில்க்கோட சிறப்பே அவரோட கண்ணுதான். ஆனால் இந்த வித்யா பாலன் கண்ணை சில்க் கண்ணோட ஒப்பிட்டு பார்க்க முடியுமா? என்று சீறினார் அன்று வினுச்சக்கரவர்த்தி .

ஆனால் இன்று வித்யா பாலன் தேசியவிருது பெற்றுள்ளார். கணிப்புக்கள் எப்போதும் எங்கேயும் சிலசமயம் தடம்மாறலாம்.

கமலுடன்



ரஜினியுடன்








19 வருட சேவையில் தங்கமாய் ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்
LITTLE INDIA
Textile & Jewellery
பட்டுச் சேலைகள், யப்பான் துணிவகைகள், தரம்மிக்க நகைகளுக்கும் நாடுங்கள்
02131 273692



Little India வின் மற்றுமொரு சேவை
உலகெங்கும் இன்பமாய் சிறகடித்துப் பறக்க இதமான சேவை....
EurAsian - Tours
Neuss புகையிரத நிலையத்திற்கு அருகாமையில்
அனைத்து விமானச் சீட்டுக்களையும், குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள். India Visa பெறவும் உதவி செய்வோம். அத்துடன் தங்குமிட வசதி, Tour Bus ஒழுங்குகள் செய்து தரப்படும். முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொண்டு ஆசனங்களைப் பதிவு செய்யலாம்.
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Rishi 0174 96 44 965
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy



Eurasian Tours
Adolf - flecken -Str.11
41460 Neuss



ASIA BAZAR
உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்ப வேண்டுமா! இதோ!!!
துரித பண மாற்றுச் சேவை!
Ria Money Transfer
MoneyGram
ஆசிய,ஆபிரிக்க உணவுவகைகள் வியாழன்சனிக்கிழமை தோறும் இலங்கை, இந்திய உடன் மரக்கறிவகைகள் கடல் உணவுப் பொருட்கள். இன்னும் பல...
தீபம்
உரிமையாளர்: பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282
தீபம் தொலைக்காட்சி அட்டைகள் எம்மிடம் கிடைக்கும்

யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு
தரமும் சுவையும் தரும்...



Tel:0231- 7252859
CEYLON IMBISS
இலங்கை உணவகம்
இலங்கை,இந்திய, உணவுகள், தரம் குன்றாத சுவையுடன் கிடைக்கும்!
திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை
Annen Str.1
44137 Dortmund

Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen



HP:0173 1937 325
T.Mohanadas
Jasmine Silk House
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
புத்தம் புது வரவுகள்!
2012 ம் ஆண்டுக்கான புத்தம் புது மொடல் சேலைகள், குருதா, சோலி பஞ்சாபிகள், மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள் வந்து குவிந்துள்ளன! சிறந்த தரத்தில்!! உயர் ரகத்தில்!!! உங்கள் எண்ணம்போல் கிடைக்கும்.
யேர்மனியில் எமது நிறுவனத்தின் நேரடி இறக்குமதியாளர்கள்!தரத்திற்கும், மலிவிற்கும்,அதே காரணம்!
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்



Tel:02102 844744

StaR - Impex
StaR-Impex
யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!



SALE
கடல் உணவு வகைகள் வாரம் உடனுக்குடன் இறக்குமதி செய்கின்றோம்!
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
StaR Impex
Gutschein
எம்மிடம் 100 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தடவை ஒரு முத்திரை பதிக்கப்படும்.
இவ்வாறு 10 முத்திரை நீங்கள் பெற்றபின் எம்மிடம் இருந்து 50 யூரோவிற்கான Gutschein ஒன்று வழங்கப்படும்.
(இச்சலுகை நேரடியாக உடன் பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே)
தரமான முத்திரை பதித்த தயாரிப்புக்களான Niru,Kings,NGR, Rabeena, Suriya,Vaani,Leela,TRS பொருட்கள் எம்மிடம் நியாயவிலையில் கிடைக்கும்!
எம்மிடம் ஆசிய ஆபிரிக்க உணவுப்பொருட்கள் பலசரக்குப் பொருட்கள், கடலுணவு வகைகள் பூஜைப்பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்!
Kipper str.Tor.3
44147 Dortmund
Germany
StaR Impex : Inh :K.Sivasubramaniam

யாழ்ப்பாணத்தில் ஓர் சிறந்த திருமண மண்டபம்
திருமுருகன் திருமண மண்டபம்
நீர்வேலி-யாழ்ப்பாணம்
உரிமையாளர்.
திரு.சிவசுப்பிரமணியம் (செட்டியார்)
Tel: 0094 77 66 60 211
யேர்மனியில் தொடர்புகளுக்கு:
0231/8602696 Mobil: 0172/2183703



Tel.: 0231/8602696
Mobil: 0172/2183703- Fax: 0231/8602698
E-Mail: star-impex@live.de - Web.Star-impe.net